## இரண்டாம் பகுதி

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கணக்குகள் | 111 |
| 2. | வெளிநாட்டுச் செலாவணி | 111 |
| 3. | உள்நாட்டு வங்கித் தொழில் | 114 |
| 4. | வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம் | 117 |
| 5. | வங்கித் தொழில் அபிவிருத்தி | 118 |
| 6. | நாணய வழங்கல் | 118 |
| 7. | வங்கி மேற்பார்வை | 119 |
| 8. | அபிவிருத்தி நிதி | 120 |
| 9. | பொதுப்படுகடன் | 123 |
| 10. | செலாவணிக் கட்டுப்பாடு | 126 |
| 11. | ஊழியர் சேமநிதியம் | 130 |
| 12. | புள்ளிவிபரம் | 132 |
| 13. | பயிற்சி | 133 |
| 14. | ஆளணி | 134 |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகள்

1979ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் நிதிக் கணக்குகள் அட்டவணை 2.3 இல் தரப்பட்டுள்ளன. 1979 திசெம்பர் இறுதியில் முதன்மை மாற்றங்கள் 1978 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு அடிப்படையில் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.1

கணக்குகளின் முதன்மை மாற்றங்கள்

ரூ. ப. இ.

| | மாற்றம் | |
|---|---|---|
| நாணயச் சுற்றேட்டம் | + 812.5 | |
| கேள்வி வைப்புக்கள் | + 845.1 | |
| வெளிநாட்டுக் கடன்பாடுகள் | — 86.0 | |
| மொத்தக் கேள்விப் பொறுப்புக்கள் | | + 1571.6 |
| பன்னாட்டு | | + 1827.8 |
| உள்நாட்டுச் சொத்துக்கள் | | + 366.0 |

\+ அதிகரிப்பு — வீழ்ச்சி

1979 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் வருவாய் ரூ. 968,390,002 ஆகவும், செலவினம், ஒதுக்குகளுக்கான பகிர்வுகள், காணி கட்டடம், அலுவலகத் தளபாடம் என்பவற்றின் பெறுமானத்தின் பேரிலான தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் ரூ. 967,390,002 ஆகவும் இருந்தது. தேறிய இலாப மான ரூ. 1,000,000 நாணய விதிச் சட்டத்தின் 39 (ஆ) என்னும் பிரிவின் நியதிகளின்படி மிகைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

## வெளிநாட்டுச் செலாவணி

இலங்கை ரூபாயின்பெறுமதி 1979 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் மாறிக் கொண்டிருந்தமையால் ஐ. அ. டொலர். பவுண் ஸ்டேர்லிங், டியூஸ்மார்க்கு, பிரான்சிய பிராங்கு, யப்பானிய யென், இந்தியா ரூபா என்பவற்றிற்கான மத்திய வங்கியின் நாணயவீதங்கள், மத்திய வங்கியினால் ஒவ்வொரு வேலை நாட்களிலும் பி. ப. 2.00 மணிக்குக் குறிக்கப்பட்டன. ஆண்டு முடிவில் இந்த நாணயங்களுக்கான குறிக்கப்பட்ட வீதங்கள் பின்வருமாறு:-

அட்டவணை 2.2

செலாவணி வீதங்கள்

| நாணயம் / 100 அலகுகளில் | த்திய வீதம் | வாடிக்கைக்காரர்களின் தந்திமுறை மாற்றல்களுக்கான வர்த்தக வங்கிகளின் அலுவல் சார்பான செலாவணி வீதங்கள் | |
|---|---|---|---|
| | | வாங்கல் | விற்றல் |
| ஐ. அ. டொலர் ... | ரூ. 1,544.50 | ரூ. 1,543.00 | ரூ. 1,546.00 |
| பவுண் ஸ்டேர்லிங் ... | ரூ. 3,456.50 | ரூ. 3,453.50 | ரூ. 3,459.50 |
| டியுஸ் மார்க்கு ... | ரூ. 900.00 | ரூ. 899.20 | ரூ. 900.80 |
| பிரான்சி பிராங்கு ... | ரூ. 386.00 | ரூ. 385.65 | ரூ. 386.35 |
| யப்பானிய யென் ... | ரூ. 6.4540 | ரூ. 6.4465 | ரூ. 6.4615 |
| இந்திய ரூபா ... | ரூ. 194.00 | ரூ. 193.80 | ரூ. 194.20 |

## 1979 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் நாளில்

### ஐந்தொகை — 1979 ஆம் ஆண்டு திசெம்பர்

| 1978 திசெம்பர் 31 ரூபா | 1978 திசெம்பர் 31 ரூபா | பொறுப்புக்கள் | 1979 திசெம்பர் 31 ரூபா | 1979 திசெம்பர் 31 ரூபா |
|---|---|---|---|---|
| | | **மூலதனக் கணக்கு** | | |
| 15,000,000 | | முதல் ... ... ... ... | 15,000,000 | |
| 63,000,000 | 78,000,000 | மிகை ... ... ... ... | 64,000,000 | 79,000,000 |
| | | **பொறுப்புக்கள்** | | |
| 3,356,471,756 | | சுற்றோட்டத்திலுள்ள தாள் நாணயங்கள் ... | 4,139,947,484 | |
| 152,118,668 | 3,508,590,424 | சுற்றோட்டத்திலுள்ள குத்தி நாணயங்கள் ... | 181,193,429 | 4,321,140,913 |
| | | **வைப்புக்கள்** | | |
| 1,033,559,401 | | அரசு ... ... ... | 728,369,702 | |
| 15,799,218 | | அரச முகவர் நிலையங்களும், அரச நிறுவனங்களும் . | 12,012,495 | |
| 737,753,831 | | வர்த்தக வங்கிகள் ... ... ... | 966,034,215 | |
| 1,569,277,554 | | பன்னாட்டு அமைப்புக்களும், வெளிநாட்டு அரசு, வெளி நாட்டு வங்கி நிறுவனங்களும் ... | 2,528,919,886 | |
| 284,447 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூ. 117,827,850/- இலட்சம் கொண்ட தொகையை நீக்கிய கட்டாய சேமிப்பு நிதி ... ... | 312,753 | |
| 272,979,662 | 3,629,654,113 | ஏனையவை ... ... ... | 239,090,680 | 4,474,739,731 |
| | 155,116,452 | வெளிநாட்டிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ... | | 69,121,689 |
| | 125,000,000 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் ... | | 275,000,000 |
| | — | மூலதன உதவுதொகைக் கணக்கு ... | | 26,250,000 |
| | 6,743,577,250 | ஏனைய பொறுப்புக்களும், கணக்குகளும் ... | | 7,590,680,268 |
| | 14,239,938,239 | | | 16,835,932,601 |

### 1979, திசெம்பர் 31ஆம் நாள்

| 1978 திசெம்பர் 31 ரூபா | | 1979 திசெம்பர் 31 ரூபா |
|---|---|---|
| 618,329,410 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்களையும், தாள் நாணயங்கள், குத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடத்தினதும், அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத்தேய்வையும், உள்ளடக்கும்) நாணயச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட பகிர்வுகளுக்கும். | 967,390,002 |
| 1,000,000 | மீதி, 1979 ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற ஆண்டின் தேறிய இலாபம். இதன்பின் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன்படி தேறிய இலாபமானது மிகைக்குக் கொண்டு செல்லப்பட்டது. | 1,000,000 |
| 619,329,410 | | 968,390,002 |

1979ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள், இலங்கை அரசியல் அமைப்பின் பிரிவு 154 (1) இற்கு அமையவும், 1971 இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரிமையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (2) இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

பி. எம். டபிள்யூ. விஜயசூரிய
கணக்காய்வாளர் நாயகம்

கணக்காய்வு அலுவலகம்,
கொழும்பு – 7.
1980, மாச்சு 28

அட்டவணை 2.3

## உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள்

### 31ஆம் நாளில் உள்ளபடி

| 1978 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 1979 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா. | | ரூபா | ரூபா |
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 5,274,583,604 | | இலங்கைக்கு வெளியே உள்ள பணங்களும், நிலுவைகளும்... | 7,238,023,657 | |
| 345,472,040 | | *வெளிநாட்டு அரசுகளினதும், அரசுகளற்றவற்றினதும் பிணைகள் ... ... | 281,523,784 | |
| 512,381,125 | 6,132,436,769 | சிறப்பு எடுப்பனவு உரிமை உடைமைகள் ... ... | 440,682,355 | 7,960,229,796 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| | | கடன்களும் முற்பணங்களும் | | |
| 955,500,000 | | அரசிற்கு ... ... ... | 1,136,500,000 | |
| 63,816,667 | | ஏனையவற்றிற்கு – நடுத்தர நீண்டகால | 91,244,688 | |
| 1,012,122,000 | | குறுங்கால ... | 556,908,000 | |
| 2,119,704,609 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ... .. | 2,706,204,611 | |
| -- | 4,151,143,276 | நிதி, ஏனைய நிறுவனங்களுக்கான உதவு தொகைகள் ... | 26,250,000 | 4,517,107,299 |
| | 3,956,358,194 | ஏனைய சொத்துக்களும், கணக்குகளும் ... ... | | 4,358,595,506 |
| | | *அரச நிலையங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1 இல் ரூபா 5,441,169 முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24இல் ரூபா 57,450 முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூ. 2,867,960 ஆகவும், ரூ. 34,340 ஆகவும் இருந்தன) | | |
| | 14,239,938,239 | | | 16,835,932,601 |

## முடிவுற்ற ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| 1978 திசெம்பர் 31 | | 1979 திசெ. 31 |
|---|---|---|
| ரூபா | | ரூபா |
| 619,329,410 | „ ஏனைய ... ... ... | 968,390,002 |
| 619,329,410 | | 968,390,002 |

**டபிள்யூ. இராசபுத்ரம்**
ஆளுநர்

**வெ. சி. சுப்பிரமணியம்**
முதன்மைக் கணக்காளர்

மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணை 31 இல் காட்டப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நாணயத் தாள்கள்

இலங்கையில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளிடமிருந்து மத்திய வங்கி குறிப்பிட்ட வெளிநாட்டு நாணயத் தாள்களை குறிக்கப்பட்ட வீதங்களில் தொடர்ந்து கொள்வனவு செய்தும் விற்பனவு செய்தும் வந்தது.

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்

மத்திய வங்கி ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தில் உறுப்புரிமை வகிக்கும் ஒரு வங்கியாகத் தொடர்ந்து விளங்கியது. உறுப்புரிமை வகிக்கும் ஏனைய வங்கிகளுக்கு (கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவிற்கு ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் ஊடாக) இலங்கையால் கொடுக்கப்பட்ட தேறிய தொகை ரூ. 7,542 இலட்சமாகும். இது சென்ற ஆண்டின் ரூ. 10,814 இலட்சம் கொண்ட தொகையுடன் ஒப்பிடுகையில் குறிப்பிட்ட வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இவ்வீழ்ச்சிக்கு ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் ஊடாக 1979 ஆம் ஆண்டு தொடக்கம் பாகித்தானுடன் வர்த்தகத்தை ஆற்றுப்படுத்தியமையே முதன்மைக் காரணியாக அமைகிறது. 1979 ஆம் ஆண்டிற்கு முன்னர் அத்தகைய எல்லா கொடுக்கல் வாங்கல்களும் ஐ. அ. டொலர் கொடுகடன் ஒப்பந்தத்தின் ஊடாக வழிப்படுத்தப்பட்டன. இவ்வாண்டில் இலங்கையில் இருந்து பாகித்தானுக்கு செய்யப்பட்ட ஏற்றுமதிகளின் பெறுமதி அந்நாட்டிலிருந்து பெற்ற இறக்குமதிகளின் பெறுமதியிலும் உயர்வாக இருந்தமையால் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்கு கடன் தீர்ப்பனவிற்காக கொடுபடற்குரிய தேறிய தொகை குறைக்கப்பட்டது.

இந்தியா குடியகல்வோர்களுக்கான உதவு தொகை

1977 நவம்பர் 16இலிருந்து ஒன்றிணைக்கப்பட்ட செலாவணி வீதங்கள் அறிமுகப்படுத்தியதன் விளைவாக 1964 இன் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் கீழ் இந்தியாவுக்குக் குடியகன்று செல்வோருக்கு பணம் அனுப்புவதற்காக இசைவளிக்கப்பட்ட தொகையின் 65% இற்குச் சமனான தொகையை அல்லது அதில் ஒரு பகுதியை அரசு வழங்க முடிவு செய்தது.

குடியகலும இந்திய வழித்தோன்றல்களான தோட்டத் தொழிலாளருக்கு அவர்கள் இலங்கையை விட்டு செல்வதை ஊக்குவிக்குமுகமாக இலங்கை ரூ. 500/- ஐயும் இத்தொகையின் 65% ஐயும் தண்ணளிக் கொடுப்பனவாகக் கொடுப்பதற்கு அரசு முடிவு செய்தது.

மேற்சொல்லப்பட்ட இவ்விரு திட்டங்களையும் அரசின் சார்பாக மத்திய வங்கி செயல்முறைப்படுத்தி வருகின்றது. குடியகல்வோர்க்குப் பணம் அனுப்பும் வேளையில் வர்த்தக வங்கிகளினால் கொடுக்கப்படும் முற்பணங்கள் மத்திய வங்கியினால் மீளக் கொடுக்கப்பட்டது.

உள்நாட்டு வங்கித் தொழில்

அரச பிணைகள், வர்த்தக உற்பத்திக் கடன்கள் தொடர்பான வாக்குறுதிச் சான்றிதழ்கள் என்பவற்றிற்கு எதிரான முற்பணங்கள் மீதான மத்திய வங்கி

யின் வட்டி வீதம் ஆண்டிற்கு 10% ஆகத் தொடர்ந்திருந்தது.

எனினும் மத்தியவங்கியினிடமிருந்து எவ்வேளையிலும் வர்த்தக வங்கிகளின் வங்கிவீதத்திலானகடன்பாடுகள் 1979 யூன் 30 ஆம் நாளிலுள்ளவாறுன வர்த்தக வங்கிகளின் பின்வரும் சொத்து விடயங்களின் 4 சதவீதத்திற்குட்பட்டு இருத்தல் வேண்டும். அவையாவன கழிவுடன் மாற்றப்பட்டு நிதியிடப்பட்ட உண்டியல்களும் (அரசின் வேளாண்மை கொடுகடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களைத் தவிர) மேலதிகப் பற்றுக்களுமாகும். இவ்வசதி வர்த்தக வங்கிகள் அவசியமற்ற தேவைகளுக்கு வழங்கப்பட்ட 1976 யூன் 30 ஆம் நாளிலுள்ள கடன்கள் தரத்திற்கு மிகைப்படக் கூடாது என்பதற்கு உட்பட்டதாகும். இவ்வெல்லையைத் தாண்டின் இவ்வசதி அம்மிகையான தொகையால் குறைக்கப்பட்டது.

1979 செத்தெம்பர் தொடக்கம் மத்திய வங்கி பின்வரும் அடிப்படையில் குறிக்கப்பட்ட எல்லைகளுக்கு மேலாக வர்த்தக வங்கிகளுக்கு கடன்களை வழங்கியது.

1. குறிக்கப்பட்ட எல்லைக்கு மேலாக முதல் 10 சதவீதத்திற்கு — ஆண்டிற்கு 15 சதவீதம்.
2. குறிக்கப்பட்ட எல்லைக்கு மேலாக இரண்டாவது 10 சதவீதத்திற்கு — ஆண்டிற்கு 16 சதவீதம்.
3. குறிக்கப்பட்ட எல்லைக்கு மேலாக மூன்றுவது 10 சதவீதத்திற்கு — ஆண்டிற்கு 18 சதவீதம்.
4. குறிக்கப்பட்ட எல்லைக்கு மேலாக நாலாவது 10 சதவீதத்திற்கு — ஆண்டிற்கு 20 சதவீதம்.
5. குறிக்கப்பட்ட எல்லைக்கு மேலாக ஐந்தாவது 10 சதவீதத்திற்கு — ஆண்டிற்கு 22 சதவீதம்.
6. மிகுதிக்கு — ஆண்டிற்கு 25 சதவீதம்.

வர்த்தக வங்கிகளினுல் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், வேளாண்மைப்பணி நிலையங்களுக்கும் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெற்கொள்வனவிற்கும், உள்ளூரில் பயிரிடப்படும் ஏனைய சில குறிக்கப்பட்ட பயிர்களின் கொள்வனவு, களஞ்சியப்படுத்தல் அல்லது விற்பனைக்கும் நிதியிடுவதற்கும் ஒப்புதலளிக்கப்பட்ட தனியார் என்போர்க்கு வர்த்தக வங்கிகளினுல் வழங்கப்பட்ட முற்பணங்களையொட்டி வாக்குறுதிச் சான்றிதழ்களின் அடகுக்கு எதிராக வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கியின் முற்பணங்களின் பேரிலான வட்டி வீதம் மாற்றமுறுது ஆண்டிற்கு 3 சதவீதமாகவே இருந்தது. நெல், காய்கறிகள் ஏனைய குறிப்பிட்ட பயிர்களின் உற்பத்தி தொடர்பாக கூட்டுறவுச் சங்கங்களின் அல்லது வேளாண்மையாளரின் வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பிணையாகக்கொண்டு வர்த்தக வங்கிகளுக்குக் கொடுக்கப்பட்ட மத்திய வங்கியின் முற்பணங்களின் பேரிலான வட்டி வீதம் ஆண்டிற்கு $1\frac{1}{2}$ சதவீதமாகத் தொடர்ந்தும் இருந்தது. எனினும், இது இவ்வசதி கிடைக்கப்பெற்ற வங்கிகள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து 8 சதவீதத்திற்கு மேற்படாமலும் கடன்கள் நேரடியாக வழங்கப்பட்ட வேளாண்மையாளரிடமிருந்து (உரிய நாளில் கொடுப்பனவு செய்யப்படின் 3 சதவீத கழிவு என்பதற்குட்பட்டு) ஆண்டிற்கு 9 சதவீதத்திற்கு மேற்படாமலும் விதிக்க வேண்டும் என்பதற்கு உட்பட்டதாகும்.

### நடுத்தர நீண்டகாலக் கொடுகடன்

1979 ஒகத்துக்கு முன்னர் நடுத்தர, நீண்ட கால கொடுகடன் நிதியத்திலிருந்தான மீள நிதியிடல் வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய கொடுகடன் நிறு

வனங்களுக்கும் (அ) வேளாண்மை ஊக்குவிப்பும் அல்லது அபிவிருத்தியும் (ஆ) வேளாண்மை சாரா்பற்ற தேவைகள் போன்றவற்றிற்கு வழங்கப்பட்டது, விதிக்கப்பட்ட வட்டி வீதங்கள் முறையே 6½, 7½ சதவீதங்களாகும்.

நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியின் கீழான மீள நிதியிடல் திட்டம் 1979 ஒகத்து 1ம் நாள் தொடக்கம் திருத்தியமைக்கப்பட்டது. மீள நிதியிடல் வழங்கல் தேவைகளுக்காக விண்ணப்பங்கள் பின்வரும் மூன்று தொகுதிகளாக வகுக்கப்பட்டன.

**தொகுதி 1:**

வர்த்தக வங்கிகளினாலும் ஏனைய கொடுகடன் நிறுவனங்களாலும் உரிய அமைச்சுக்களினாலும் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்களின் கீழ் வேளாண்மை, மீன்பிடித்தொழில் உயர்வுக்கு அல்லது அபிவிருத்திக்காக உணவுப் பயிர்கள், பெருந்தோட்டப் பயிர்கள், காய்கறித் தோட்டம், மலர்ச்செடி வளர்ப்பு, மீன், கால்நடைப் பண்ணை என்பவற்றின் உயர்வு அல்லது அபிவிருத்தி உட்பட கொடுக்கப்பட்ட கடன்கள்.

**தொகுதி 2:**

சுற்றுலா உட்பட்ட கைத்தொழிலின் உயர்வுகளும் அல்லது அபிவிருத்திகளும் உரிய அமைச்சுகளினால் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்களுக்குப் புறம்பான வேளாண்மை, மீன்பிடித் தொழில்களும் வரிவிடுதலைகளையுடைய (1979 ஆம் ஆண்டின் 28ஆம் எண்கொண்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ்) ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டு நிறுவனங்களுக்கும் கொடுக்கப்பட்ட கடன்கள்.

**தொகுதி 3:**

வர்த்தக வங்கிகளாலும் ஏனைய கொடுகடன் நிறுவனங்களாலும், கைத்தொழில் வியாபாரம், வாணிபம், வர்த்தகம், வர்த்தக ஊர்திகள் பொறிகளை நிறுவுதல், களஞ்சியங்கள், அலுவலகக் கட்டடங்கள் போன்ற வர்த்தகக் கட்டடங்களின் அமைப்பு என்பன உட்பட, மற்றும் மத்திய வங்கியினால் அதன் விருப்புரையின் பேரில் பொருளாதார அபிவிருத்திகளுக்குத் தேவையெனக் கருதப்பட்ட ஏனைய தேவைகள் (தொகுதிகள் 1, 2 இன் கீழுள்ளவை தவிர்ந்த) போன்றவற்றின் உயர்வுக்கு அல்லது அபிவிருத்திக்கு வழங்கப்பட்ட கடன்களும் மற்றும் நாணய விதிச் சட்டத்தின் 88 'அ' என்னும் பிரிவில் விபரித்துள்ளவாறான 'உற்பத்தித் தேவைகள்' என்ற கருத்தின் கீழ் வரும் என, நாணயச் சபையினால், அதன் கருத்துப்படி எல்லாக் கடன்களும்.

மீள நிதியிடல் அளவு வட்டி வீதங்கள், மற்றைய நியதிகள் நிபந்தனைகளும் கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.4
நடுத்தர நீண்டகால நிதியிடல்

| தொகுதி | மீள நிதியிடல் அளவு | கடன் காலப்பகுதி | மீள நிதியிடல் மீதான வட்டி வீதம் | கொடுகடன் நிறுவனத்திற்கு இசைவளிக்கப்பட்ட எல்லை | செயற்றிட்டத்தின் மொத்த செலவிற்கு முயற்சிதாபனம் ஒன்று செய்யவேண்டிய குறைந்தபட்ச உதவுதொகை |
|---|---|---|---|---|---|
| I | 100% | 3 – 15 ஆண்டுகள் | 6½% | 4% | 10% |
| II | 6% | 3 – 15 ஆண்டுகள் | 9% | 5% | 20% |
| III | 60% | 3 – 15 ஆண்டுகள் | 11% | 5% | 20% |

தொகுதி 1 இன் கீழான கடன்களைப் பொறுத்தமட்டில் கொடுகடன் நிலையம் வழக்கமான நிதியிடல் வீதத்தின் பேரில் (6½%) தவறாது கடனைத் தீர்ப்பனவு செய்வதற்கு கழிவாக கடன் வாங்குபவர்க்கு 7 சதவீதத்தில் 3 சதவீதத்தை அளிப்பது என்பதற்கு உட்பட்டு 7 சதவீத எல்லையை விதிக்கலாம். அவ்வேளையில் மீள நிதியிடல் வீதம 3 சதவீதம் வழக்கமான வீதத்திலும் கூடியதாகும். அத்தகைய கழிவு இருக்குமிடத்து கடன் கொடுக்கும் நிறுவனம் மத்திய வங்கியிடமிருந்து அத்தகைய கொடுப்பனவின் மீள நிதியீட்டலைக் கோரலாம்.

1978ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூ. 210 இலட்சம் கொண்ட மீள நிதியிடல் கடன்களுக்கு எதிராக 1979 ஆம் ஆண்டில் ரூ. 419 இலட்சம் கொண்ட மீளநிதியிடல் கடன்கள் கொடுகடன் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

### திறைச்சேரி உண்டியல்கள்

திறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கியின் கழிவு வீதம் கேள்வி மூலம் அல்லது மத்திய வங்கியிடமிருந்து திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்படும் வீதத்திலும் பார்க்க $^1/_8$ சதவீதம் தொடர்ந்தும் கூடுதலாகவே இருந்தது.

### கட்டாய சேமிப்புக்கள்

1971 ஆம் ஆண்டின் 6 ஆம் எண்கொண்ட கட்டாய சேமிப்புச் சட்டத்தினதும் 1972 ஆம் ஆண்டின் 15ம் எண்கொண்ட வருமான உச்ச வரம்பு, கட்டாய சேமிப்புச் சட்டத்தினதும் நியதிகளின்படி சேகரிக்கப்பட்ட பணங்களுக்கு காப்பாளராகவும், கட்டாய சேமிப்பு நிதியத்தை அரசின் சார்பில் கொண்டு நடாத்துநராகவும் மத்திய வங்கி தொடர்ந்தும் இருந்தது. இவ்வாண்டில் வங்கி கிடைக்கப்பெற்ற 4,289 மீளப்பெறுகை விண்ணப்பங்களின் பேரில் உதவுநர்களுக்கு ரூ. 10,213,720 (வட்டியும் உட்பட) கொடுத்தது.

### மூலதன உதவு தொகைகள்

1979 இல் மத்திய வங்கி இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலதனத்திற்கு ரூ. 12,50,000 ஐயும், இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கியின் மூலதனத்திற்கு ரூ. 25,000,000 ஐயும் மத்திய பொது ஒதுக்குக் கணக்கிலிருந்து செலுத்தியது.

### வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம்

1979 மே இல் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ஏற்ப இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கிகளுக்கு அவற்றின் உள்ளூர் வங்கித் தொழில் கூறுகளிலிருந்து வேறாக வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் கூறுகளை (வெ நா வ கூ.) இயக்குவதற்கு இசைவளிக்கப்பட்டது. இவ் வெ. நா. வ. கூ. தவணை, கேள்வி வைப்புக்களை ஏற்கவும், (ஆனால் காசோலை மூலம் பணம் எடுப்பனவு செய்யும் சேமிப்புக் கணக்குகள் அல்ல) எவரேனும் வதிவற்றோர் அல்லது கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு அல்லது ஏதேனும் ஒப்புதலளிக்கப்பட்ட நாணய நாட்டின் ஒப்புதலளிக்கப்பட்ட வதிவற்றவரொருவர் என்போருக்கு அல்லது என்போரிடம் இருந்து நிதிகளைக் கடன் பெறவும், அல்லது கடன்கள், முற்பணங்களைக் கொடுக்கவும் அனுமதிக்கப்பட்டன. எனினும் இக்கூறுகள், இலங்கையின் ஏற்று

மதி வருவாய்களில் இருந்துவரும் வைப்புக்களை ஏற்பதற்கு அனுமதிக்கப்பட வில்லை. தற்போது ஒப்புதலளிக்கப்பட்ட நாணயங்கள் ஐக்கிய அமெரிக்க டொலர், ஸ்ரேலிங் பவுண், பிரான்சிய பிராங்கு, யப்பானியயென், நெதர்லாந்து கில்டர், வீடிசுசு குரோனர், சுவிசு பிராங், டியூஸ் மார்க்கு, ஒங்கொங் டொலர், சிங்கப்பூர் டொலர் என்பனவாகும். 1979 நவெம்பரில் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் கூறுகள் கொடுகடன் சான்றிதழ்களை நிறுவுவதற்கு, திறப்பதற்கு அல்லது அறிவுரை வழங்குவதற்கு, உத்தரவாதங்கள். இழப்பெதிர்க்காப்பீடு கள் அல்லது இதேமாதிரியான பொறுப்புக்களை வழங்குவதற்கு ஒப்புதலளிக்கப் பட்ட வெளிநாட்டு நாணயங்களில் உண்டியல்களை மாற்ற அல்லது ஏற்றுக் கொள்ள இசைவளிக்கப்பட்டன. எனினும், இது அத்தகைய கொடுக்கல் வாங் கல்களுக்கு உரியவர்கள் வதிவற்றோர்களாயும், கொழும்பு பெரும்பாக பொரு ளாதார ஆணைக்குழுவின் முயற்சிகளாகவும் இருத்தல் வேண்டும் என்பதற்கு உட்பட்டதாகும்.

1979 இல் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் கூறுகள் கொழும்பில் இலங்கை வங்கி கொடுகடன், வரையறுக்கப்பட்ட பன்னாட்டு கொடுகடன் வர்த் தக (கடல் கடந்த) வங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி, வரை யறுக்கப்பட்ட கிறின்லேஸ் வங்கி, வரையறுக்கப்பட்ட அட்டன் நெசினல் வங்கி, ஒங்கொங் சங்காய் வங்கித் தொழில் கூட்டுத்தாபனம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தோ - சுவெசு வங்கி, மக்கள் வங்கி, இந்திய நாட்டு வங்கி என்ப வற்றினால் நிறுவப்பட்டன.

## வங்கித் தொழில் அபிவிருத்தி

வெளிநாட்டு வங்கிகளை இலங்கையில் நிறுவுமாறு வரவேற்கும் அரசின் கொள்கையின் அறிவிப்பைத் தொடர்ந்து வெளிநாட்டிலுள்ள வங்கிகளிட மிருந்து கொழும்பில் கிளைகளைத் திறப்பதற்கு பல விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றன. இவற்றில் மூன்றுவங்கிகள் கிளைகளைத் திறந்தன. இவற்றில் பாங்கடீலா இந்தோசைன் எட்சுவெசு (இந்தோ சுவெசு) மாச்சு 12 இலும் வரையறுக்கப்பட்ட பன்னாட்டு கொடுகடன வர்த்தக (கடல் கடந்த) வங்கி (வபகொவ.) 27 ஏப்பிரலிலும், சிட்டி வங்கி வட அமெரிக்கா திசெம்பர் 5இலும் தொழிற்பாடுகளைத் தொடங்கின.

முன்னணியிலுள்ள இரு வர்த்தக வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி இவ்வாண்டில் முறையே 37, 26 கிளைகளைத் திறந்தன. அட்டன் நெச னல் வங்கி ஒரு கிளையைத் திறந்தது. எனவே 1979 இறுதியில் வங்கிக் கிளை களின் மொத்த எண்ணிக்கை 785 ஆக இருந்தது. இவ் எண்ணிக்கை வேளாண் மைப்பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கியின் 362 கிளைகளையும் உள்ளடக் கும். ஆனால் 22 கச்சேரிக் கிளைகளையும் 10 கொடுப்பனவு அலுவலகங்களையும் உள்ளடக்காது.

## நாணய வழங்கல்

1979 ஆம் ஆண்டின் முடிவில் புழக்கத்திலுள்ள மொத்த நாணயத்தொகை ரூ. 43211 இலட்சமாகும். இது முன்னைய ஆண்டிலுள்ள ரூ. 35086 இலட்சம் தொகையுடன் ஒப்பிடுகையில் ரூ. 8,125 இலட்சம் அதிகரிப்பினைக்

காட்டுகின்றன. 1979ஆம் ஆண்டின்போது புழக்கத்திலிருந்த நாணயத் தாள்கள் ரூ. 7,835 இலட்சத்தால் அதிகரித்திருந்தது. இதற்கு முன்னைய ஆண்டில் இவ்வதிகரிப்பு ரூ. 2680 இலட்சமாகும். 1979ஆம் ஆண்டில் 50 ரூபாத்தாள்களும் 100 ரூபாத் தாள்களும் முறையே ரூ. 1,848 இலட்சத்தாலும் ரூ. 5,601 இலட்சத்தாலும் அதிகரித்துக் காணப்பட்டன. குற்றி நாணயப் புழக்கத்தில் 1979 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட மொத்த அதிகரிப்பு ரூ. 291 இலட்சமாகும். இது எல்லா இன நாணயங்களினதும் அதிகரிப்பைக் குறிக்கின்றது. ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் காணப்பட்ட அதிகரிப்பு ரூ. 215 இலட்சமாகும்.

1978 ஆம் ஆண்டில் மேலும் நாணயத் தாள்களை வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்ட போது இலங்கையின் தாவர, விலங்கினத்தை மையக் கருவாகக் கொண்ட வடிவமைப்பில் ஒரு மாற்றத்தைச் செய்வதென நிதி திட்டமிடல் அமைச்சின் ஒருப்பாட்டுடன் நாணயச் சபையானது முடிவு செய்தது புதிய வடிவமைப்புக் கொண்ட 2/-, 5/- ரூபா இனப் பெறுமதியுள்ள நாணயத் தாள்கள் முறையே 1979 நவம்பரிலும் திசெம்பரிலும் முதலில் வழங்கப்பட்டன.

1978 ஆம் ஆண்டின் இறுதியில் செப்பு 5 சத, 10 சதப் பெறுமதியுடைய குற்றி நாணயங்களுக்கிருந்த பெரும் தட்டுப்பாடு அலுமினியக் கலப்பு உலோகத்தாலான அதே இனப் பெறுமதி கொண்ட குற்றி நாணயங்களை 1979 இல் வழங்குவதன் மூலம் தீர்த்துவைக்கப்பட்டது

குற்றி நாணயங்கள் தவறாகப் பயன்படுத்துவதனை தடுப்பதற்கான மேலதிக பாதுகாப்பு வழிவகை என்ற வகையில் இலங்கையில் சட்டப்படி செல்லுபடியுள்ள ஏதனும் குற்றி நாணயத்தை உருக்குதல், உடைத்தல், வெட்டுதல், துளையிடல், சேதப்படுத்தல் அல்லது சட்டமற்ற நாணயமாகவல்லாது வேறு வகையாகப் பயன்படுத்தல் ஒரு தவறாகும் எனக் கூறும் சட்டமொன்று 1979 மார்ச்சில் கொண்டுவரப்பட்டது.

## வங்கி மேற்பார்வை

நாணயச் சட்டத்தின் 29 (1) ஆம் பிரிவின் கீழ் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 1979 ஆம் ஆண்டில் ஒன்பது (9) வர்த்தக வங்கிகளின் மேலாய்வினை முடித்துக்கொண்டது. இதன் மூலம் 1978/79 ஆம் ஆண்டுக் காலப் பகுதியின் போது இலங்கையிற் தொழிற்பட்டு வந்த வர்த்தக வங்கி ஒவ்வொன்றினதும் மேலாய்வினை அது முடித்துக்கொண்டது.

1979 ஆம் ஆண்டின் 27 ஆம் எண் கொண்ட நிதிக் கூட்டு நிலையங்களைக் கட்டுப்படுத்தற் சட்டம் உருவாக்கப்பட்டு அச் சட்டத்தின் ஏற்பாடுகள் 1979-12-16 தொடக்கம் நடைமுறைக்கு வந்தன. அச்சட்டத்தினை உருவாக்குதல் தொடர்பான வேலையும் அக்கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான பூர்வாங்க ஒழுங்குகள் யாவும் இப்பகுதியில் கையாளப்பட்டன.

வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளினால் தாபிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்கூறுகளின் கொடுக்கல் வாங்கல்களை மேற்பார்வை செய்வதிலும் இத்திணைக்களம் ஈடுபட்டிருந்தது.

## அபிவிருத்தி நிதி

1979 ஆம் ஆண்டின் இத்திணைக்களத்தின் முயற்சிகளின் எல்லை அளவும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இது குறிப்பாக நடுத்தர, நீண்டகாலத் தவணைக் கொடுகடன் நிதியத்திலே தொடங்கப்பட்ட கடன் வழங்கும் செயல்களினதும் 1978 ஏப்பிரலில் செயற்படத் தொடங்கிய சிறிய அளவிலான கைத்தொழில் செயற்றிட்டங்களின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களின் உத்தரவாதங்களிற்குத் தொடர்ந்த அதிகரித்த கேள்வியும், அமைச்சுக்களினால் ஆதரவளிக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில், ஆக்குதலிலும் செயற்படுத்தலிலும் முயற்சியான பங்கெடுப்பும், ஆசிய அபிவிருத்தி வங்கிகளில் நிதியிடப்படும் கிராமிய கொடுகடன் செயற்றிட்டத்தின் செயற்படுத்தல் ஆகியன தொடக்கிவைக்கப்பட்டதன் விளைவேயாகும்.

1979 இல் நடுத்தர, நீண்டகால தவணைக் கொடுகடன் நிதியத்திலிருந்து மீள நிதியிடல் மூலம் ரூ. 419 இலட்சம் கொண்ட தொகை 1978 இன் ரூ 218 இலட்சத்திற்கு எதிராக வழங்கப்பட்டது.

### அட்டவணை 2.5

### நடுத்தர நீண்ட கால மீளநிதியிடல்

ரூ. ப. இ.

| தேவை | | 1977 | 1978 | 1979 |
|---|---|---|---|---|
| வேளாண்மை | ... | இல்லை | இல்லை | 2.0 |
| கடற்றொழில் | ... | 1.8 | 6.2 | 5.5 |
| உணவகங்கள் | ... | 2.9 | 7.4 | 2.0 |
| கைத்தொழில் | ... | 5.1 | 6.7 | 24.7 |
| ஏனையவை | ... | 0.5 | 0.8 | 7.7 |
| மொத்தம் | ... | 10.3 | 21.1 | 41.9 |

இவ்வாண்டின் போது மத்திய வங்கி பின்வரும் திட்டங்களுக்காக ரூ. 2,393 இலட்சம் அளவில் மீள நிதியிடல் நிதிகள் ஒதுக்குவதை சாதகமாகக் கருதியது.

### அட்டவணை 2.6

### கருத்திலுள்ள மீள நிதியிடல் முன்மொழிவுகள் — 1979

| செயற்றிட்டத்தின் பெயர் | மீளநிதியிடல் தொகை ரூ. ப. இ. |
|---|---|
| 1. சிறு உடைமையாளர்களால் ஒகிட் செடிகளைப் பயிரிடுவதற்கான கொடுகடன் திட்டம் | 4.5 |
| 2. தெங்கு வளமாக்கி கொடுகடன் திட்டம் ... | 30.0 |
| 3. நீர்ப்பாசன புத்தமைப்பு செயற்றிட்டம் ... | 7.7 |
| 4. கடற்றொழில் துறை வங்கி நிதியிடல் திட்டம் ... | 32.0 |
| 5. நுவரேலியா மாவட்ட பாற்பண்ணை அபிவிருத்திச் செயற்றிட்டம் ... | 10.0 |
| 6. குருணாகலை மாவட்ட ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ் பண்ணை பொறி கடன் திட்டம் ... | 40.0 |
| 7. சம்மாந்துறை தேர்தல் தொகுதி பாற்பண்ணை அபிவிருத்தி செயற்றிட்டம் | 0.1 |
| 8. மகாவலி செயற்றிட்டத்தில் குடியோர்கள் ஊழுபொறிகள் கொள்வனவு செய்வதற்கு உதவியளிக்கும் கொடுகடன் திட்டம் ... | 55.0 |
| 9. அபுடாபி நிதியிடப்பட்ட வடக்கு மேற்கு கரை கடற்றொழில் அபிவிருத்தி செயற்றிட்டம் ... | 60.0 |
| மொத்தம் .. | 239.3 |

UNIVERSITY OF MORATUWA LIBRARY

## சிறு கைத்தொழில் கொடுகடன் உத்தரவாதம்

1978 ஏப்பிரலில் மத்திய வங்கியானது கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து மக்கள் வங்கி, இலங்கை வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றில் சிறு கைத்தொழிலாளர்க்கு வழங்கப்பட்ட கடன்களை மேவுவதற்கெனச் சிறு அளவு கைத்தொழில் செயற்றிட்ட கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் செயலாற்றலைப் பொறுப்பேற்றது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மூல தொகையில் 75 சதவீதத்தை அல்லது கொடுக்கத் தவறிய தொகையில் எது குறைவோ அதற்கு மத்திய வங்கி உத்தரவாதமளிக்கிறது. 1979 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களின் அளவு 492 செயற் திட்டங்களையொட்டி ரூ. 159 இலட்சமாகும். 14 சந்தைப்படுத்தற் கடன்களையொட்டியும் இவ்வாண்டில் ரூ. 1,67,862 கொண்ட தொகைக்கு உத்தரவாதமளிக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டிற்கான ஒப்பிடக்கூடிய எண்தொகை 79 செயற்றிட்டங்களையொட்டி ரூ. 19 இலட்சம், 7 சந்தைப்படுத்தற் கடன்களையொட்டி ரூ. 1,04,256 ஆகும். கீழுள்ள தரவுகள் உதவியளிக்கப்பட்ட கைத்தொழிலால் பகுக்கப்பட்டு, வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாத சந்தைப் படுத்தற் கடன்களின் விபரங்களைத் தருகின்றது.

### அட்டவணை 2.7
### வழங்கப்பட்ட சிறு கைத்தொழில் உத்தரவாதங்கள்

ரூபா

| கைத்தொழில் | கடன்களின் எண்ணிக்கை | | தொகை | |
|---|---|---|---|---|
| | 1978 | 1979 | 1978 | 1979 |
| 1. அரிசி அரைத்தல் ... | 2 | 51 | 202,000 | 6,327,045 |
| 2. இலகு பொறியியல் கைத்தொழில்கள் ... | 15 | 101 | 379,065 | 3,706,997 |
| 3. செங்கட்டிகளும் ஏனைய கட்டிடப்பொருட்களும் ... | 13 | 171 | 68,700 | 1,304,250 |
| 4. தைக்கப்பட்ட உடுப்புகள், பத்திக், கைத்தறிப் பொருட்கள், விரிப்புக்கள் இன்னோன்ன ... | 10 | 40 | 201,380 | 952,799 |
| 5. இறப்பரை அடிப்படையான பொருட்கள் ... | 3 | 9 | 163.920 | 145,567 |
| 6. காலணிகள், ஏனைய தோல் உற்பத்திகள் ... | 2 | 7 | 16,500 | 216,150 |
| 7. பனங்கட்டியும், கரும்பு உற்பத்திகளும் ... | 14 | 6 | 447,775 | 109,047 |
| 8. தளபாடங்களும் ஏனைய மரப்பொருட்களும் ... | 6 | 11 | 70,606 | 229,940 |
| 9. தும்பும் தும்புப் பொருட்களும் ... | 3 | 14 | 102,245 | 352,465 |
| 10. எழுதுகருவிகளும் ஏனைய தாள் உற்பத்திகளும் ... | 3 | 12 | 52,689 | 413.358 |
| 11. உணவும் குடிவகைகளும் .. | 1 | 8 | 7,000 | 282,850 |
| 12. காய்கறி எண்ணெய்கள் ... | 1 | 5 | 40,000 | 88,910 |
| 13. பூச்சுக்கள், மினுக்கிகள், வண்ணமெருகு எண்ணெய் .. | — | 3 | — | 209,600 |
| 14. வானொலி, ஈருருளி ஆகியவற்றிற்கான உதிரிப்பாகங்கள் ... | 5 | 13 | 133,180 | 816.792 |
| 15. சவர்க்காரம், ஏனைய குளியலறைப் பொருட்கள் ... | 2 | 22 | 21,800 | 295,775 |
| 16. கைப்பணிப்பொருட்களும்விளையாட்டுப்பொருட்களும் .. | -- | 16 | -- | 184,890 |
| 17. சுருட்டுகளும், பீடிகளும் .. | 1 | 5 | 8,000 | 32,500 |
| 18. மீன்பிடி வள்ளங்களும் உள்ளூர் மீன்பிடித்தொழிலும் ... | 1 | 2 | 16,200 | 11,000 |
| 19. நகைகளும் இரத்தினக் கற்களும் ... | 2 | 4 | 12,110 | 56,850 |
| 20. ஏனையவை ... | 2 | 6 | 67,240 | 385,917 |
| மொத்தம் .. | 86 | 506 | 2 010,410(அ) | 16,122,642(ஆ) |

(அ) ரூ. 104,256 கொண்ட 7 சந்தைபடுத்தற் கடன்களும் உட்பட

(ஆ) ரூ. 167,862 கொண்ட 14 சந்தைப்படுத்தற் கடன்கள் உட்பட

செயற்றிட்டங்களின் எண்ணிக்கையையும், உத்தரவாதமளிக்கப்பட்ட கடன் நிதிகளின் அளவையும் நோக்கும் போது 1979 ஆம் ஆண்டில் செயற்படுத்தல்கள் ஊக்கமளிப்பதாயுள்ளன. 1979ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 1,20,967 தொகை கொண்ட இழப்புகளிற்குரிய 8 கோரிக்கைகள் அறிவிக்கப்பட்டு அவைகள் ஆய்வில் உள்ளன.

**சிறு நடுத்தர கைத்தொழில் செயற்றிட்டம்**

இலங்கை அரசு பன்னாட்டு அபிவிருத்தி அமைப்புடன் ஐ. அ. டொ. 160 இலட்சத்திற்குக் கடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதில் ஐ. அ. டொ. 120 இலட்சம் இலங்கையில் சிறு, நடுத்தர கைத்தொழில் (சி. ந. கை.) செயற்றிட்டங்களுக்கு மீள நிதியிடலுக்கென தேசிய அபிவிருத்தி வங்கிக்குக் கொடுக்கப்பட்டது. மிகுதி ஐ. அ. டொலர் 40 இலட்சமும், சிறு, நடுத்தர கைத்தொழில்களுக்கு சிறப்பு பணி நிலையங்களை அமைத்து கடன் வழங்கும் நிறுவனங்களின் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க உதவுமுகமாக கைத்தொழில் அபிவிருத்திச் சபை தொழில் நுட்ப உதவியினைப் பெறும் செலவுகளை ஈடு செய்வதற்கு பயன்படுத்தப்படும். தேசிய அபிவிருத்தி வங்கி 1979 செத்தெம்பரில் செயற்படத் தொடங்கியது.

நாணயச் சபையானது நாணய விதிச் சட்டத்தின் 108 'அ' என்னும் பிரிவின் கீழ் தேசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து மீள நிதியிடல் பெற்ற சிறு, நடுத்தர திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களால் கொடுக்கப்பட்ட கடன்களின் 60 சதவீதம் உத்தரவாதமளிக்கப்படுவதற்கு இசைவு கொடுத்தது. சிறு நடுத்தர உத்தரவாதத் திட்டம் 1979 ஒற்ரோபர் 1 இல் நடைமுறைக்கு வந்தது.

**கிராமிய கொடுகடன் செயற்றிட்டம்**

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இலங்கையில் உறுதியான கிராமிய கொடுகடன் அமைப்பொன்றை நிறுவுவதன் வசதிகளை ஆராய்வதற்கென அழைக்கப்பட்ட உ. வி. தா. முதலீட்டு நிலையத்திலிருந்தான வல்லுனர் குழு மத்திய வங்கியில் கிராமிய கொடுகடன் திணைக்களத்தை அமைப்பதை விதந்துரை செய்தது. இவ்விதந்துரைக்கு இணங்குமுகமாகவும் கிராமியத் துறையின் பொருளாதார சிக்கல்கள் தொடர்பாக நுணுக்கமாக ஆராய்வதற்கு நாணயச் சபையானது 1979 ஒற்ரோபர் 22 இல் கிராமிய கொடுகடன் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தைத் தாபித்தது. இப்புதிய திணைக்களம் எதிர்பார்த்துள்ள கிராமிய கொடுகடன் ஆலோசனைச் சபைக்கு செயலகமாகக் கடமை புரியும். இச்சபை வங்கியினால் பின்பற்றப்படும் முழுமையான நாணய கொடுகடன் கொள்கைகளுடன் இணக்கமாயுள்ள கிராமியத் துறைக்காகக் கடன் வழங்கும் கொள்கைகளை வகுக்கும்.

**அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் உத்தரவாதத் திட்டம்**

1978 பெப்புருவரி 8 இல் இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இ. ஏ. கொ. க. கூ) திறக்கப்பட்டதுடன், மத்திய வங்கி அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தைச் செயற்படுத்துவதிலிருந்து நீங்கியது. இத்திட்டத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் 1978 ஆம் ஆண்டின எண் 15 கொண்ட இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி இ. ஏ. கொ. க. கூ. இங்கு மாற்றப்பட்டன.

**பொதுப்படு கடன்**

மொத்த பொதுப்படுகடன் 1979 ஆம் ஆண்டின்போது 4,524,931,110 ரூபாவால் அதிகரித்து இவ்வாண்டின் முடிவில் 35,474,749,265 ரூபாவாக இருந்தது. பெறுமதி அடிப்படையில் உள்ளூர்க் கடன் 3,266,573,111 ரூபாவாலும் வெளிநாட்டுப் படுகடன் 1,258,357.999 ரூபாவாலும் அதிகரித்திருந்தது. 1979 ஆம் ஆண்டு முடிவில் உள்ளவாறான பொதுப்படுகடனின் உள்ளடக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.8

**பொதுப்படுகடனின் உள்ளடக்கம்**

ரூபாய்களில்

| விபரம் | | வெளி நிற்கும் | | 1979 இன் போதான மாற்றம் |
|---|---|---|---|---|
| | | 31 திசெம்பர் 1978 | 31 திசெம்பர் 1979 | |
| 1. உள்ளூர்க் கடன் | ... | 16,367,554,626 | 19,634,127,737 | + 3,266,573,111 |
| 1.1. நீண்டகாலக் கடன் | ... | 12,747,589,444 | 15,469,581,462 | + 2,721,992,018 |
| அ. ரூபாக் கடன்கள் | ... | 12,049,061,600 | 14,929,061,600 | + 2,880,000,000 |
| ஆ. நிருவாகக் கடன்பாடுகள் | ... | 698,454,005 | 540,446,023 | — 158,007,982 |
| இ. தேசிய அபிவிருத்திமுறிகள் | ... | 73,839 | 73,839 | -- |
| 1.2. குறுங்காலக் கடன் | ... | 3,619,965,182 | 4,164,546,275 | + 544,581,093 |
| அ. திறைசேரி உண்டியல்கள் | ... | 2,635,000,000 | 3,000,000,000 | + 365,000,000 |
| ஆ. வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | ... | 29,465,182 | 28,046,275 | — 1,418,907 |
| இ. மத்திய வங்கி முற்பணங்கள் | ... | 955,500,000 | 1,136,500,000 | + 181,000,000 |
| 2. வெளிநாட்டுக் கடன் | ... | 14,582,263,529 | 15,840,621,528 | + 1,258,357,999 |
| 2.1. செயற்றிட்டக் கடன்கள் | ... | 4,833,051,153 | 5,569,534,723 | + 736,483,571 |
| 2.2. பண்டக் கடன்கள் | ... | 8,969,926,870 | 8,900,894,901 | — 69,031,969 |
| 2.3. ஏனைய கடன்கள் | ... | 779,285,506 | 1,370,191,904 | + 590,906,398 |
| 3. மொத்தப் பொதுப்படு கடன் | ... | 30,949,818,155 | 35,474,749,265 | + 4,524,931,110 |

**உள்நாட்டுக் கடன்கள்**

**(அ) ரூபாக் கடன்கள்**

1979 ஆம் நிதி ஆண்டுக்கான அரசாங்க வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித் திட்டம் உள்ளூர் வங்கியல்லா மூலங்களிலிருந்து 19500 இலட்சம் ரூபாத் தொகையைத் திரட்ட எதிர்பார்த்தது. 1979 ஒகத்து மாதக் கடைசியில் இத்தொகை முழுமையாகப் பெறப்பட்டது. அரசாங்கத்தின் நிதித் தேவைப்பாடுகளையும் சந்தையில் முதலீடு செய்யத்தகு நிதிகள் கிடைக்கத்தகு தன்மையையும் கருத்திற் கொண்டு 1979 ஆம் ஆண்டுக்கான கடன் நிகழ்ச்சித் திட்டம் 29500 இலட்சம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. ஆண்டு முடிவில் மீளாய்வு செய்யப்பட்ட கடன் நிகழ்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இது மூல வரவு செலவு மதிப்பீட்டைக் காட்டிலும் 10000 இலட்சம் ரூபா அதிகரிப்பைக் காட்டியது.

திரட்டப்பட்ட ரூ. 29,500 இலட்சம் கொண்ட கடன் தொகை ரூ. 3500 இலட்சம் கொண்ட ஒரு கடன் மூலமும், ஒவ்வொன்றும் ரூ. 2000 இலட்சம்

கொண்ட 13 கடன்கள் மூலமும் திரட்டப்பட்டது. இக்கடன்கள் 1978 ஆம் ஆண்டின் 18 எண் கொண்ட ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் பெறப்பட்டது. இவை 10 முதல் 12 வரையிலான ஆண்டுகளுக்கானவையாகும். இவற்றுக்கான வட்டி ஆண்டொன்றுக்கு 10% ஆகும். தேசிய சேமிப்பு வங்கி, கூட்டு முதலீட்டு நிதியம், ஊழியர் சேமிப்பு நிதியம் என்பன ரூபாக் கடன்களுக்கு தொடர்ந்தும் பெரும் வழங்குநர்களாக விளங்கின. 1979 இன் போது ரூபாக் கடன் ஒவ்வொன்றுக்குமான ஒப்பப் பணங்கள் பற்றிய விபரங்கள் 2.8 என்னும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

இவ்வாண்டின்போது முதிர்ச்சிபெற்ற 700 இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று ரூபாக் கடன்கள். இக்கடன்களின் கடன் கரைப்பு நிதியங்களைப் பயன்படுத்தி மீள செலுத்தப்பட்டன. இக்கடன்கள் பேரிலான கடன் கரைப்பு நிதியங்கள் 7,075,626 ரூபாவை மேன்மிகையாகக் காட்டியது, இத்தொகை திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டின்போது ரூபாக் கடன்களின் கணக்கால் பொறுப்பிலுள்ள தேறிய அதிகரிப்பு 28800 இலட்சம் ரூபாவாகும்.

1979 ஆம் ஆண்டு முடிவில் ரூபாக் கடன்களை மீட்பதற்கென நிறுவப்பட்ட கடன் கரைப்பு நிதியங்களின் பெறுமதி 3,962,896,061 ரூபாவாகும். இது இவ்வாண்டின்போது 758,803,192 ரூபா அதிகரிப்பைக் காட்டுகின்றது.

(ஆ) நிருவாகக் கடன்பாடுகள்

மத்திய வங்கிக்கூடாக அரசாங்கத்துக்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்யப்பட்ட மூன்று கடன்கள் பொதுப்படு கடனின் கீழ் நிருவாகக் கடன்பெறுகைகளாக வகுக்கப்பட்டுள்ளன. 1979 ஆம் ஆண்டு முடிவில் இக்கடன்களின் வழமையாகவுள்ள மொத்த ரூபாப் பொறுப்பு 540,446,023 ரூபாவாகும்.

(இ) தேசிய அபிவிருத்தி முறிகள்

1961 ஆம் ஆண்டின் 65 ஆம் எண் கொண்ட நிதிச்சட்டத்தின் 19 (1) ஆம் பிரிவின் கீழ் தேசிய அபிவிருத்தி முறிகள் உள்நாட்டு இறைவரி ஆணையாளரினால் வழங்கப்பட்டன. இவ்வாண்டின்போது எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் இருக்கவில்லை. வெளி நிலுவையாகவுள்ள தொகை 73,839 ரூபாவாகஇருந்தது.

(ஈ) திறைசேரி உண்டியல்கள்

1976 நவெம்பர் 26 ஆம் நாளின்போது தேசிய அரசுப் பேரவையின் தீர்மானம் மூலம் 30000 இலட்சம் ரூபாயாக ஒப்புதலளிக்கப்பட்ட அரசின் திறைசேரி உண்டியல்களின் ஒப்புதலளிககப்பட்ட எல்லை இவ்வாண்டின்போது மாற்றமடையாதிருந்தது. வழங்கப்பட்டு வெளி நிலுவையாகவுள்ள திறைசேரி உண்டியல்களின் மொத்தத் தொகை 1979ஆம் ஆண்டு முடிவில் 30000 இலட்சம் ரூபாவாக இருந்தது. இது இவ்வாண்டின்போது 3650 இலட்சம் ரூபா அதிகரிப்பைக் காட்டுகின்றது. வங்கித் துறையினர் திறைசேரி உண்டியல்களில் 27064 இலட்சம் ரூபாவை வைததிருந்தனர். இதில் மத்திய வங்கியின் பங்கு 26564 இலட்சம் ரூபாவாகும். வங்கியல்லாத் துறையினா வைத்திருந்த தொகை 4351 இலட்சம் ரூபாவிலிருந்து 1,936 இலட்சம் ரூபாவாகக் குறைந்தது. திறைசேரி உண்டியல்களுக்கான வட்டி வீதம் இவ்வாண்டின்போது 9 சத வீதமாக மாற்றமில்லாதிருந்தது.

(உ) வரி ஒதுக்குச் சான்றிதழ்கள்

1977 இல் 7500 இலட்சம் ரூபாவாக அதிகரித்த வரி ஒதுக்குச் சான்றிதழ்களை வழங்குவதன் மீதான ஒப்புதலளிக்கப்பட்ட எல்லை இவ்வாண்டின்போதும் மாற்றமடையாதிருந்தது. 1979 ஆம் ஆண்டின் முடிவுரை வழங்கப்பட்ட சான்றிதழ்கள் 737,538,600 ரூபாப் பெறுமதியுடையனவாகும். இத்தொகையுள் 709,492,325 ரூபாப் பெறுமதியான சான்றிதழ்கள் கொடுப்பனவுக்காக ஒப்படைக்கப்பட்டன. இதில் வெளி நிலுவையாகவுள்ள தொகை 28,046,275ரூபாவாகும். 1978 ஆம் ஆண்டு முடிவில் உள்ள மட்டத்தோடு ஒப்பிடுகையில் இவ்வாண்டின்போது இது 1,418,907 ரூபா கொண்ட தேறிய வீழ்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது.

(ஊ) மத்திய வங்கி முற்பணங்கள்

1979 இல் மத்திய வங்கியினால் அரசிற்குக் கொடுக்கப்பட்ட தற்காலிக முற்பணங்கள் 181,000,000 ரூபாவால் அதிகரித்தன. ஆண்டு முடிவில் இக்கடன்கள் வகையால் வெளி நின்ற பொறுப்பு 1,136,500,000 ரூபாவாகும்.

வெளிநாட்டுக் கடன்

1979 ஆம் ஆண்டு முடிவில் வெளி நின்ற மொத்த வெளிநாட்டுக் கடன் (நிருவாகக் கடன் பெறுகைகள் தவிர) 15,840,621,528 ரூபாவாகும். இது இவ்வாண்டின்போது 1,258, 357, 999 ரூபா அதிகரிப்பைக் காட்டுகின்றது. 5, 569, 534,723 ரூபா பெறுமதியான செயற்றிட்டக் கடன்களும் 8,900,894,901 ரூ. பெறுமதியான பண்டக் கடன்களும் ரூ. 1,370,191,904 பன்னாட்டு நாணய நிதியத்தின் பொறுப்பாண்மை நிதியக் கடன்களும் இவ்வெளி நாட்டுக் கடனுள் அடங்கும். 1979 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன்களின் கீழ் பெறப்பட்ட தொகை 2,878,406,848 ரூபாவாகவும் மீளக் கொடுக்கப்பட்டது. 499,133,117 ரூபாவாகவும் இருந்தது.

பொதுப் படுகடனின் கீழ் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் பெரும் பாகம் பல்வேறு வெளிநாட்டு நாணயங்களில் இனங் குறிக்கப்பட்டன. ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் வெளிநின்ற வெளிநாட்டு நாணயத் தொகைகள் செலாவணி வீதங்களிலுள்ள மாற்றங்களுக்கேற்ப மீளப் பெறுமதியிடப்பட்டன. 1979 இன்போது அத்தகைய மீளப் பெறுமதியிடலால் எல்லாவற்றினதும் கணக்கால் பொறுப்பிலுள்ள மாற்றம் வெளிநாட்டுக் கடன் பொறுப்பை 513,340,417 ரூபாவாகக் குறைத்தது. இவ்வாண்டின்போது இடம்பெற்ற மீளளிப்புக்களும், பதிலளிப்புக்களும், நீக்கங்களும்கூட வெளிநாட்டுக் கடன் பொறுப்பை 804,411,321ரூபாவாகக் குறைக்க உதவின. இத்தொகையில் பிரித்தானிய அரசாங்கத்தால் பதிவழிக்கப்பட்ட பதினைந்து கடன்களின் கணக்கால் குறைக்கப்பட்ட பொறுப்பு 792,080,382 ரூபாவாகும்.

1979 ஆம் ஆண்டின்போது 25 புதிய வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகள் ஒப்பமிடப்பட்டன. இக்கடன்களுள் 20 தொடர்பிலான மீளப் பெறுகைகள் தொடங்கப்படவில்லை. இக்கடன்கள்பற்றிய விபரங்கள் அட்டவணை 2.9இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.9

பொதுப்படுகடன்மீதான வட்டிக்கொடுப்பனவு (1)

| கடனின் வகை | | 1978 | 1979 |
|---|---|---|---|
| 1. உள்ளூர்க்கடன் | ... | 1,054,724,639 | 1,276,933,248 |
| 1.1 ரூபாக்கடன்கள் | ... | 830,929,008 | 1,028,678,106 |
| 1.2 நிருவாகக்கடன்பெறுகைகள் (2) | ... | 39,889,369 | 27,552,069 |
| 1.3 திறைசேரி உண்டியல்கள் | ... | 173,919,871 | 220,050,000 |
| 1.4 வரிஒதுக்குச்சான்றிதழ்கள் | ... | 986,391 | 653,073 |
| 2. வெளிநாட்டுக்கடன் | ... | 285,031,967 | 356,680,312 |
| 3. மொத்தம் | ... | 1,339,756,606 | 1,633,613,560 |

(1) திறைசேரியினுல் கொடுக்கப்பட்ட தற்காலிக ரூபாக்கடன்பெறுகைகள் மீதும் குறுங்கால வெளிநாட்டுக் கடன்கள் மீதுமான வட்டிக்கொடுப்பனவுகள் நீங்கலாக.

(2) இதில் கே. எவ். டபிள்யூ கடனும் ஏ. எல். 556 ஆம் கடனும் ஈரானிய கடனும் அடங்கும்.

### வட்டிக் கொடுப்பனவுகள்

1979ஆம் ஆண்டின்போது பொதுப்படு கடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1,633,613,560 ரூபாவாகும். 1978 ஆம் ஆண்டின் உள்ளதைக் காட்டிலும் 293,856,954 ரூபா அதிகரிப்பை இது காட்டுகின்றது.

### அரச சார்பு நிறுவனங்களினுல் பெறப்பட்ட கடன்பாடுகள்

1979 ஆம் ஆண்டின்போது தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன்களில் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுமில்லை. 1979 இல் வழங்கப்பட்டு வெளி நிலுவையாகவுள்ள தொகுதிக் கடன்களின் தொகை 81,000,000 ரூபாவாகும். இத்தொகுதிக் கடன்முறிகளை மீட்பதற்காக நிறுவப்பட்ட கடன்கரைப்பு நிதியத்தின் அண்ணளவான சந்தைப்பெறுமதி 45,670,817 ரூபாவாகும். இது இவ்வாண்டின்போது ரூபா 5,792,798 அதிகரிப்பைக் காட்டுகின்றது.

1979 ஆம் ஆண்டின்போது 15,000,000 ரூபா பெறுமதியான அரச முதலீட்டு வங்கி தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்டன. எதுவித மீளக்கொடுப்பனவுகளும் இருக்கவில்லை. 1979 இறுதியில் வழங்கப்பட்டு வெளிநிற்கும் தொகுதிக் கடன்கள் ரூ. 47,250,000 தொகையைக் கொண்டதாகும்.

### செலாவணிக் கட்டுப்பாடு

அரசின் கொள்கைக்கேற்ப செலாவணிக் கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்பட்டு நடைமுறைகள் மிக கூடுதலான கடமைகள் வழங்கப்பட்டதுடன் வர்த்தக வங்கிகளுக்கு கையளிக்கப்பட்டன.

1. பயணம்

கருணை அடிப்படையில் பயணம்

பயணத்திற்கான தமது அடிப்படைப் படியைப் பயன்படுத்தியவர்களும் நெருங்கிய உறவினர்களின் உடல்நலக்குறைவு போன்ற காரணங்களுக்காகவும் மற்றும் முக்கிய சொந்த விடயங்களுக்காகவும் பயணம் செய்யத் தேவையுடைய வர்களுமான ஆட்களுக்கு குறிப்பிட்ட கூடியபட்சச் செலாவணி ஒதுக்கீடுகள் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்பட்டது. ஆகக்கூடியது பின்வருமாறு :-

அ. இந்தியத் தொகுதி நாடுகள் - இ. ரூ. 750/-
ஆ. ஏனைய நாடுகள் பவுண்ஸ்ரேலிங் 200

2. மருத்துவ அடிப்படையிலான பயணம்

மருத்துவத்திற்காக வெளிநாட்டுக்குச் செல்லும் ஆட்களிற்குரிய வாழ்க் கைச் செலவுகளுக்கான செலாவணி அளவு பின்வருமாறு அதிகரிக்கப்பட் டுள்ளது.

அ. இந்தியத் தொகுதி -நாடுகள் வயது வந்த ஆளொன்றுக்கு 130 பவுண் ஸ்ரேலிங் 12 வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளை ஒன்றுக்கு 65 ,,

ஆ. ஏனைய நாடுகள் - வயது வந்த ஆளொன்றுக்கு 500 பவுண்ஸ்ரேலிங் 12 வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளை ஒன்றுக்கு 250 ,,

3. இந்திய வழித்தோன்றல்களின் பயணம்

நேரு-கொத்தலாவலை, சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தங்களால் மேவப்பட்ட இந்திய வழித்தோன்றல்களுக்கு, அவர்கள் இலங்கையை விட்டு நிலையாக நீங்கு முன்னர் இந்தியாவிற்கு குறுகிய காலத்திற்குச் சென்றுவர உதவுமுகமாக வயது வந்த ஆளொன்றுச்கு ரூ. 50 உம் 12 வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளை ஒன்றிற்கு ரூ. 25/- உம் என ஆண்டுக்கு ஆண்டு ஒதுக்கு செய்யப்பட்டது.

4. ''பி'' படிவ வழிமுறை

நாட்டின் மற்றவர்களும் வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கையில் வர்த்தக வங்கிகளுடன் வெளிநிலை ரூபாக் கணக்கு வைத்திருப்பவர்களுமானோர் விடயத்தில் வெளிநாட்டுப் பயணத்திற்கான பயணச் சீட்டை பதிவு செய்து கொள்வதற்கு ''பி'' படிவம் ஒப்படைத்தல் வேண்டும் என்ற நியதி நீக்கப் பட்டது.

(v) நாணய வெளிப்படுத்தற் படிவத்தை நீக்குதல்

பயன்பாட்டிலிருந்த செலாவணிக் கட்டுப்பாடு படிவம் 'டி' 1979 மே 1ஆம் நாளிருந்து நீக்கப்பட்டது. அதே நாளிருந்து புதிய வெளிப்படுத்தற் படிவ மொன்று சுங்கத் திணைக்களத்தினால் புகுத்தப்பட்டது.

(vi) நாணயத்தின் மீளமாற்றல்

சுற்றுப் பயணத்தர்களாலும் இடைப்போக்குப் பயணிகளாலும் செலவு செய்யப்படாது வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயத்தை மீளமாற்ற லின்மேல் விதிக்கப்பட்ட உச்சவரம்பெல்லை நீக்கப்பட்டது

2. குடியகல்வு

ஆளொருவருக்கு ரூ. 15000/- கொண்ட பெறுமதியான சொந்த உடைமைகளை ஏற்றுமதி செய்யவும் அதற்குரிய கப்பற் கட்டணச் செலவினை உள்ளூரில் கொடுப்பனவு செய்யவும் அனுமதிக்கப்பட்டது.

2. வதிவற்றோர் தடுத்துவைக்கப்பட்ட கணக்குகள்

(i) இலங்கையில் வர்த்தக வங்கிகளுடன் வதிவற்றோர் தடுத்துவைக்கப்பட்ட கணக்குகளைப்பேணும் வெளிநாட்டில் வதியும் இலங்கை இனத்தவர்களுக்கு அவர்கள் வெளிநாட்டில் ரூ. 100,000/-பெறும் வாய்ப்பினைப் பயன்படுத்தாவிடின் தமது வதிவற்றோர் வெளிநாட்டு நாணய கணக்குகளிற்கு (வ. அ. வெ. நா. கணக்குகள்) ரூ. 100,000/-கொண்ட தொகையினை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

(ii) வதிவற்றோர் தடுத்துவைக்கப்பட்ட கணக்குகளிலுள்ள பணங்களை உள்ளூர் முயற்சிகள் எதனிலும் முதலீடு செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது. அத்தகைய முதலீடுகளிலிருந்து பெறும் ரூ. 100,000/- கொண்ட தொகை வரையும் வெளிநாட்டு நாணய முதலீடுகளாக வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழுவின் அல்லது கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் தோதானவாறு அங்கீகாரம் பெறப்பட்டது என்பதற்கு உட்பட்டு வெளிநாட்டு நாணய முதலீடுகளாகக் கருதப்படும்.

4. ஏற்றுமதிகள்

பட்டிக் உடைகளில் ஏற்றுமதிக்குரிய விண்ணப்பங்கள் கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சரிடமிருந்து பெற்றதகவுரையினல் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்பட்டது.

5. இறக்குமதிகள்

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினல் (கொ. பெ. பொ. ஆ.) ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்புவலயத்தின் (மு. உ. பி.) முயற்சிகள் 1977ஆம் ஆண்டின் 1ஆம் எண்கொண்ட சிறப்பு இறக்குமதி உரிமைச் சான்றிதழின்கீழ் தமது பயன்பாட்டிற்குத் தேவைப்படும் பொருட்களின் இறக்குமதிக்காக கொடுகடன் சான்றிதழ்கள் நிறுவ வேண்டும் என்ற நிபந்தனையிலிருந்து விலக்குப் பெறுகின்றன.

6. கப்பல் தொழில் வானூர்தி கணக்குகள்

கணக்குகளை ஒன்றுசேர்த்தல்

ஒவ்வொரு முதல்வர்களின் பெயரிலிருந்து கப்பல் தொழில், வானூர்தி கணக்குகள் எண் 1, 2 என்பன ஒவ்வொரு முதல்வரின் பெயரிலும் ஒரு வெளிநிலைக் கணக்காக ஒன்று சேர்க்கப்பட்டது.

7. வர்த்தக வங்கிகளுக்கு கையளித்தல்

பின்வருவனற்றை ஒப்புதலளிக்கும் மேலாண்மை வர்த்தக வங்கிகளுக்குக் கையளிக்கப்பட்டது

(அ) வெளிநாட்டில் பட்ட முன்படிப்பு, பட்ட பின்படிப்பு தரங்களிலும் வாழ்க்கைத் தொழில் முறைசார்ந்த தொழில்நுட்ப படிப்பிற்காக பயணக் கட்டணம் வாழ்க்கைச் செலவுகள், படிப்புச் செலவுகள், நூல்கள், உடைகள் போன்ற வற்றிற்குரிய செலாவணி.

(ஆ) விளம்பரக் கட்டணங்கள், சங்கங்கள் அமைப்புக்கள் என்பவற்றிற் குரிய கட்டணங்கள் ஏற்றுமதிகளின் பேரிலான அளவீட்டுக் கட் டணங்கள் முதலிய பல்வகை பண அனுப்பல்கள்.

(இ) முயற்சி அமைப்புக்களால் தொழிலிலமர்த்தப்பட்ட வெளிநாட்டு தொழில் நுட்ப ஆளணிகள் வெளிநாட்டில் தம்மில் தங்கியிருப் போர்களைபேணுவதற்காக பணவனுப்பல்கள்.

(ஈ) பின்வருவனவொட்டி வெளிநாட்டு அமைப்புக்களின் உள்ளூர் ஆட் திரட்டும் முகவர் நிலையங்களினுல் உள் பணமனுப்பல்களுக்கு எதிராக பண அனுப்பல்கள்.

1. தமது முதல்வர்களின் கீழ் தொழிலுக்காக தேர்ந்தெடுக்கப் பட்ட ஆட்கள் அத்துடன்.

2. அது தொடர்பாக தமது சொந்த அலுவலர் பயணம் செய்யும் தேவை.

(உ) வெளிநாட்டுக் கூட்டு நிலையங்களிற்கும் இலங்கையில் அரசுடன் அல் லது அமைப்புக்களுடன் ஈடுபட்டுள்ள ஆளணிகளிற்கும் வதிவு நடை முறைக் கணக்குகளைத் திறத்தலும் பேணலும்.

(ஊ) இளைப்பாற்றச் சம்பளம், வருமானவரி மீளளிப்பு, பங்கு இலாபங்கள் தொடர்பான வரவுகளும் வதிவற்றோர் தடுத்துவைக்கப் பட்ட கணக்குகளிற்கு உள்ளூர் செலவுகளையொட்டிய பற்றுக்களும்

(எ) தனியார்கள் கூட்டு நிலையங்கள் ஆகிய வதிவற்றோர்களால் நிலையான வைப்புக்களில் வைத்திருக்கப்பட்ட தடுத்துவைக்க ப்பட்டவிதிகளின் பேரில் சேரும் வட்டிப் பண அனுப்பல்

(ஏ) கப்பல்தொழில் வானூர்தி வெளிநிலைக் கணக்குகளை திறத்தலும் பேண லும்

(ஐ) பயணக் கட்டணம், கப்பற் கூலிச் சேகரிப்புப் பண அனுப்பல் களுக்காக வெளிநிலைக் கணக்குகளைப் பேணும் உள்ளூர் கப்பற் தொழில் வானூர்தி முகவர்களின் முன்னேக்கிய கொள்வனவும்

(ஒ) பழுது பார்த்து திருப்பி அனுப்புவதற்காக மற்றும் வெளிநாட்டில் காட் சிக்கு வைத்து விற்பனை செய்வதற்காக, பவுண், வெள்ளி, பிளாட்டி னம் என்பவற்றால் செய்யப்பட்ட பொருட்களைத் தவிர்த்து ஏனைய வற்றின் ஏற்றுமதி

(ஓ) கப்பல்களின் உதிரிப்பாகங்கள் களஞ்சியங்கள் செலாவணி ஏதும் இல்லாவிடத்து கப்பல் மாற்றி ஏற்றுதல்

(ஔ) பொருள் சென்றடைய வேண்டிய நாடு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நாட்டிலிருந்து வேறுபடுமாயின் இறக்குமதிகளையொட்டிக் கொடுகடன் சான்றிதழ் நிறுவுதல்

(க) கப்பற்படுத்தற் செல்லுபடிக்காலத்தை 180 நாட்களுக்கு மேல் நீடித்தாலும் இறக்குமதிகளையிட்ட விடயத்தில் கப்பற்படுத்தலுக்கான கொடுகடன் சான்றிதழ்களை 180 நாட்களுக்கு மேற்படும்காலத்திற்கு நிறுவுதலும்

8. முதன்மைச் சுங்க சேகரிப்பாளரிடம் கையளித்தல்

பின்வருவனவற்றின் ஏற்றுமதிகளை முதன்மைச்சுங்க சேகரிப்பாளர் ஏற்றுமதி செய்யத் தனது விருப்புரிமையின்பேரில் ஒப்புதலளிப்பதற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

அ. இலங்கையரால் வெளிநாட்டிற்கு ரூ. 30,000 மேற்படாத பெறுமதியுடைய ஆபரணங்களை எடுத்துச் செல்வதற்கு.

ஆ. முன்பு இசைவளிக்கப்படாத தையற்பொறிகள், தட்டச்சுப்பொறிகள், வானொலிப்பெட்டிகள், ஈருருளிகள்போன்ற சொந்தப் பொருட்கள்

இ. வெளிநாட்டிலிருக்கும் ஆட்களுக்கு உள்ளூர் உற்பத்திகள் ரூ. 1000வரை பெறுமதியான அன்பளிப்புக்கள்

ஈ. ஒப்படை ஒவ்வொன்றிற்கும் ரூ. 1000 பெறுமதியான மாதிரிகள்

உ. ஏனைய துறை முறைகளுக்கென கப்பல் மாற்றியேற்றப்படும் சரக்குகள்

9. கப்பற்றொழில் வானூர்தி முகவர்களுக்கு ஒப்படைத்தல்

ஐ. நா. அபிவிருத்தி செயற்றிட்ட ஆளணிகளின் சார்பில் இலங்கை ரூபாய்களின் பெறுமதிக்கு எதிராகபயணச்சீட்டுக்களை வழங்குவதற்கு கப்பற்றொழில் வானூர்தி முகவர்களிற்கு வேளாண்மை கையளிக்கப்பட்டது.

ஊழியர் சேமநிதியம்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது அதன் ஊழியர் சேமநிதி திணைக்களம் மூலம் 1958ஆம் ஆண்டின் 15ஆம் எண்கொண்ட ஊழியர் சேமநிதிச் சட்டத்தின்கீழ் உதவுதொகையாக மேலதிகக் கட்டணமாக கொடுக்கப்பட்ட எல்லா தொகைகளையும் நிலையத்தின் பணங்களை முதலீடு செய்து அதனினின்றுபெற்ற ஏனைய வருமானத்தையும் பெற்றுக்கொண்டதுடன், சட்டத்தின் 5ஆம் பிரிவின் நியதிகளின்படி இப்பணங்களையொட்டிய ஏனைய தொழிற்பாடுகளையும் தொடர்ந்தும் ஆற்றியது,

## அட்டவணை 2,10
## ஊழியர் சேம நிதியம்

| | 1978 | 1979 |
|---|---|---|
| 1. பதிவு செய்யப்பட்டு மேவப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை (அ) | 85,656 | 86,569 |
| 2. பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை .. | 1,386,591 | வி. கி. |
| 3. பெறப்பட்ட உதவு தொகைகள் (ரூ) (ஆ) ... | 523,757,501 | 597,542,565 |
| 4. முதலீடுகள் (ரூ) .. | 641,964,728 | 781,057,583 |
| 5. முதலீடுகளிருந்து பெறப்பட்ட வருமானம் (ரூ) .. | 206,127,224 | 268,830,708 |
| 6. மீளளிப்புக் கொடுப்பனவுகள் (ரூ) ... | 122,012,108 | 140,514,129 |
| 7. மீளளிப்புக்களின் எண்ணிக்கை ... | 42,526 | 43,066 |
| 8. வட்டிவீதம் (%) ... | 7.5 | 8.0(இ) |
| 9. உறுப்பினர்களின் வரவு நிலுவைகள்மீதான வட்டி (ரூ) ... | 227,641,001 | 301,542,604 |

(அ) மூலம்: தொழில் திணைக்களம்

(ஆ) தொங்கல் கணக்கில் வரவு வைக்கப்பட்ட உதவுதொகைகள் நீங்கலாக

(இ) இவ்வீதம் 1979 திசெம்பர் 31 ஆம் நாளிலுள்ளவாறான உறுப்பினர்களின் நிலுவைகளுக்கு ஏற்புடைத்தாகும்.

### உதவு தொகைகள்

1979 ஆம் ஆண்டில் நிதியத்தினால் பெறப்பட்ட உதவு தொகைகள் 1978 ஆம் ஆண்டின் ரூ, 5240 இலட்சத்திற்கு எதிராக ரூ. 5980 இலட்சத்தைக் கொண்டதாகும். இது முந்திய ஆண்டின் உதவுதொகைகளின் அளவிலும் பார்க்க ரூ. 740 இலட்சம் அல்லது 14 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது.

### உறுப்பினர்களின் நிலுவைகள்

1979 ஆம் ஆண்டின் இறுதியில் உறுப்பினர்களின் நிலுவைகள் ரூ. 37,690 இலட்சமாக இருந்தது, இத்தொகை 1978 ஆம் ஆண்டின் அளவிலும பார்க்க ரூ. 7340 இலட்சம் அல்லது 24 சதவீத அதிகரிப்பைக் கொண்டதாகும்.

### முதலீடுகள்

மீள ஆய்விலுள்ள ஆண்டில் நிதியானது அரசாங்கப் பிணைகளில் ரூ. 7810 இலட்சத் தொகையை முதலீடு செய்தது, இது 1978 ஆம் ஆண்டின் அளவிலும் பார்க்க ரூ, 1390 இலட்சம் அல்லது 22 சதவீத அதிகரிப்பைக் கொண்டதாகும்.

### முதலீடுகளின் வருமானம்

1979 ஆம் ஆண்டில் நிதியத்தின் முதலீடுகளிலிருந்தான வருமானம் 1978 ஆம் ஆண்டின் ரூ. 2060 இலட்சத்திற்கு எதிராக ரூ. 2880 இலட்சமாகும். இது முந்திய ஆண்டின் ரூ. 400 இலட்சம் அல்லது 29 சதவீத அதிகரிப்பிற்கு எதிராக ரூ. 630 இலட்சம் அல்லது 30 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. இவ்வதிகரிப்பிற்கு நிதியினால் பெறப்பட்ட உதவுதொகைகளின் அதிகரித்தளவிலான முதலீடும், முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானத்தின் மீளமுதலீடுகளுமே காரணமாக அமையும்.

### மீளளிப்புக்கள்

1979 ஆம் ஆண்டில் உறுப்பினர்களுக்கு மீளளிப்புக்கள் மூலம் மொத்தமாகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 1410 இலட்சமாகும். இது 1978 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரு, 190 இலட்ச அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. 1979 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட மீளளிப்புகளின் எண்ணிக்கை 1,979 ஆம் ஆண்டின் 42,526 இற்கு எதிராக 4 3066 ஐக் கொண்டதாகும்.

**உறுப்பினர்களின் வரவு நிலுவைகளின் மீதான வட்டி**

ஊழியர் சேம நிதியானது ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் நிதியின் பண்ட முதலீடுகளிலிருந்தான வருமானத்திலிருந்து உறுப்பினர்களின் நிலுவைகளுக்கு வட்டிக் கொடுப்பனவு செய்தல் வேண்டும். உறுப்பினர்களின் நிலுவைகளிற்குக் கொடுபடற்பால வட்டி வீதம் 1979 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ள உறுப்பினர்களின் நிலுவைகளையொட்டி 7.5 சத வீதத்திலிருந்து 8 சத வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. இந் நிலுவைகளின் பேரில் கொடுபடற்பாலதான வட்டி 1978 ஆம் ஆண்டின் ரூ. 2280 இலட்சத்திற்கு எதிராக ரூ. 3020 இலட்சம் கொண்டதாயிருந்தது. இது முந்திய ஆண்டிலும் பார்க்க ரூ. 740 இலட்ச அதிகரிப்பைப் பிரதிபலித்தது. ஆண்டின் இறுதியில் உறுப்பினரொருவரின் வரவில் நிற்கும் நிலுவைகளின் பேரில் அந்நிலுவைகளின் ஏதேனும் பகுதி (உதவு தொகைகளைக் குறிக்கும்) உறுப்பினரின் வரவிற்கு நிதியினால் பெறப்பட்ட மாதத்தைக் கருத்திற்கொள்ளாது முழு ஆண்டின் வட்டியும் கொடுக்கப்பட்டதால் வட்டியின் நடைமுறைவீதம் நிலையான வட்டியிலும் பார்க்க சிறிதளவு உயர்ந்ததாகும்.

**புள்ளிவிபரம்**

புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுச் சேகரிப்பு, பகுப்பு, வெளியீடு என்பனவற்றின் விரிவான திட்டம் 1979 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது 1978/79 நுகர்வோர் நிதி சமூகப் பொருளாதார அளவீட்டின் வெளிக்கள வேலை இவ்வாண்டில் முடிவு பெற்றது. நாடெங்கிலும் தரவுச் சேகரிப்பு முறையும் இறக்குமதி தாராளமாக்கல் செயல் திட்டத்தின் அளவிடுதலும் தொடர்ந்தும் செயற்பட்டன. இத் திணைக்களம் பல வெளியீடுகளையும் வெளியிட்டது.

**நுகர்வோர் நிதியும் சமூக-பொருளாதார அளவீடும் 1978 / 79**

இவ் அளவீடானது மத்திய வங்கியின் நுகர்வோர் நிதி அளவீடுகளின் நாலாவதாகும். முந்திய அளவீட்டுத் தொடர்கள் போலல்லாது இவ் அளவீட்டின் வெளிக்கள வேலை 1978 ஒற்றோபர் 2 ஆம் திகதி தொடக்கம் ஆண்டொன்றில் நாலு முறையாக நடாத்தப்பட்டது. ஆராய்வு செய்யப்பட்ட மாதிரிகள் 8000 குடும்பங்களை உள்ளடக்கியதுடன், ஒவ்வொரு சுற்றிலும் 2000 குடும்பங்களிலிருந்து விவரக்குறிப்பு எடுக்கப்பட்டது. தரவுகள் செய் முறைப்படுத்தப்படுகிறது. அறிக்கை 1980 இல் வெளியிட எதிர்பார்க்கப்படுகின்றது. உடனடித் தரவுத் தேவை காரணமாக தொழில், தொழில் இன்மை என்பவற்றின் உத்தேச கணக்கீடும் அளவீட்டின் முதல் சுற்றுத் தரவின் வருமான பங்கீடும் பெறப்பட்டுள்ளன. இவை அறிக்கையின் முதலாம் பகுதியில் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

**குருநாகல் மாவட்ட கிராமிய அபிவிருத்தி செயறிட்டம் – மட்டக் குறி அளவீடு**

இவ் அளவீடு நுகர்வோர் நிதி சமூக பொருளாதார அளவீட்டுடன் இணைந்ததாகும். இத்தரவு மாவட்டததிற்காக வேறாக செய்முறைப்படுத்தப்பட்டு 1980 இல் கிடைக்கற்பாலதாயிருக்கும்.

**கிராமிய படுகடனின் அளவீடும் 1977 ஆம் ஆண்டின் வேளாண்மைக் கடன்களின் மீளச் செலுத்தல் அளவீடும்**

தரவுகள் செய்முறைப்படுத்தப்பட்டுள்ளன. அறிக்கை 1980 இல் வெளியிடப்படும்.

UNIVERSITY OF MORATUWA
LIBRARY

**தனியார் முதலீட்டின் மீதான அளவீடு - 1977**

தரவுகள் செய்முறைப்படுத்தப்படுகின்றன. அறிக்கை 1980 இல் வெளியிடு வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**நாடு அடங்கலும் தரவுச் சேகரிப்பு முறை**

1978 இல் புகுத்தப்பட்ட தரவுச் சேகரிப்பு முறை 1979 இலும் தொடரப் பட்டது. இச் செயற்றிட்டமானது கிட்டத்தட்ட 220 நுகர்வோர் விடயங்களின் சில்லறை விலைகளின் முதன்மை வேளாண்மை உற்பத்திகளின் உற்பத்தியாளர் விலைகள் நெல் வேளாண்மை, தேயிலை, இறப்பர், தெங்கு, சிறு உடைமைகள், கட்டடவாக்கக் கைத்தொழில் போன்றவற்றிலுள்ள கூலி வீதங்கள் என்பவற்றின் தரவுச் சேகரிப்புக்களையும், நெல் வேளாண்மை, தேயிலை, இறப்பர், தெங்குப் பெருந்தோட்டங்கள் என்பவற்றின் உள்ளீடுகளின் சில்லறை விலைகளின் சேகரிப் புக்களையும் உள்ளடக்கும். நுகர்வுப் பொருட்கள் வேளாண்மை உள்ளீடுகள், கூலி என்பவற்றின் கிடைப்பனவை ஒட்டியும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இத்தரவு கள் நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 நகர மத்திய நிலையங்களிலிருந்து ஒழுங் கான அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. முழு விபரங்களுக்குச் சென்ற ஆண் டறிக்கையைப் பார்க்கவும். சேகரிக்கப்பட்ட தரவுகள் விலை கூலி புள்ளி விபரவியல் என்ற ஆவணத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

**தாராளமாக்கபட்ட இறக்குமதி செயற்றிட்டத்தின் அளவிடுதல்**

புள்ளிவிபரத் திணைக்களமானது திறக்கப்பட்ட கொடுகடன் சான்றிதழ் கொடுகடன் சான்றிதழ்களின் மாற்றியமைப்பு கொடுகடன் சான்றிதழ்களுக்கு எதிராக பெறப்பட்ட உண்டியல்கள் என்பவற்றின் பேரில் தரவுகளைப் பெற்று தாராளமாக்கப்பட்ட இறக்குமதித் திட்டத்தின் அதன் செய்தித் தெரிவிப் புத் திட்டத்தைத் தொடர்ந்தது. ஆண்டுப் போக்கில் படிவங்கள் எளிதாக்கப் பட்டு புதிய சிட்டை இலக்கமிடும் முறை புகுத்தப்பட்டது. தரவுகள் பட்டி யல் படுத்தப்பட்டு மேலும் நுகர்வோர் இடைநிலை முதலீட்டுப் பொருட்கள் எனப் பாகுபடுத்தப்பட்டது. இவ்வாறு உருவாக்கப்பட்ட தரவுகள் பல்வேறு உரிய அமைச்சுக்களுக்குகிடைக்கக்கூடியதாக செய்யப்பட்டது.

1979 இல் மூன்று புள்ளிவிபர வெளியீடுகள் வெளியிடப்பட்டன,

1. சமூக பொருளாதார தரவு ஏடு—1979
2. இலங்கையின் பொருளாதார சமூக புள்ளிவிபரவியல் — தொகுதி 1 எண் 1 உம் 2 உம்

**பயிற்சி**

பயிற்சிப் பிரிவு தொடர்ந்தும் மத்திய வங்கியின் அலுவலர்களைப் பயிற்று தல் தொடர்பான வேலையைக் கையாண்டது.

அண்மைக் காலங்களில் இலங்கையின் வங்கித் தொழில் முறையின் விரை வான விரிவின் விளைவால் வங்கியாளரின் விரிவான பயிற்சித் திட்டத்தின் தேவை உணரப்பட்டது. இந் நோக்கத்தைப் பின்பற்றி வர்த்தக வங்கிகளின் மதியுரையுடனும் இணைவுடனும் பின்வரும் பயிற்சித் திட்டங்கள் மத்திய வங்கியினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

i. சிறிய துறைக்கு நிதியிடல் பெப்புருவரி 14—18

ii. சிறிய நடுத்தர கைத்தொழில் செயற்றிட்ட மதிப்பீடு—மே, ஓகத்து

iii. சிறிய நடுத்தர கைத்தொழில் மதிப்பீட்டுத் திறனாய்வுக் கல்விமுறை ஓகத்து—செத்தெம்பர்

iv. ஏற்றுமதி நிதியிடல் ஊக்குவிப்பு மீதான பயிற்சி செயல் திட்டம் ஓகத்து 13—24

v. வெளிநாட்டுச் செலாவணியின் பேரிலான கருத்தரங்கு திசெம்பர் 4 –7

பயிற்றப்பட்ட வங்கித் தொழில் ஆளணிகள் கிடைப்பதை உறுதிப்படுத்த உதவுமுகமாக மத்திய வங்கியானது அலுவலர் பயிற்சிக் கல்லூரி ஒன்றினை நிறுவுவதற்கு எண்ணியுள்ளது.

## ஆளணி

திரு. எச். ஈ. தென்னக்கோன் ஆளுநர் 1970 சனவரி 22இல் இறந்தார். திரு. தென்னக்கோன் அவர்கள் பிலிப்பைன்ஸ் மணிலாவில் நடைபெற்ற 14வது தென்கிழக்கு ஆசிய மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டில் பங்குபற்றியபின் இலங்கைக்குத் திரும்பும் வழியில் சிங்கப்பூரில் திடீரென காலமானார்.

முனைவர் டபிள்யூ. இராசபுத்ரம் துணை ஆளுநர் 1979 பெப்புருவரி 15 ஆம் திகதி தொடக்கம் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அவரது நியமன நேரத்தில் முனைவர் இராசபுத்ரம் அவர்கள் பன்னாட்டு நாணய நிதியத்தின் பதில் நிறைவேற்றுப் பணிப்பாளராக இருந்தார்.

ஆளுநர் முனைவர் இராசபுத்ரம் அவர்கள் 1979இல் பின்வரும் மாநாடுகளில் பங்கு பற்றினர்.

அ. பங்களாதேஸ் டாக்காவில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர்கள் சபையின் ஏழாவது ஆண்டுக் கூட்டம்(16மே-24மே)

ஆ. ஐ. நா. இலண்டனில் பொதுநல அமைப்பு ஆளுநர்களின் மாநாடு அத்துடன்

இ. சேர்மன் சமவுடைமைக் குடியரசு, கொலோனில் முதலீட்டு ஊக்குவிப்புக் கருத்தரங்கு(யூன்—5-20)

ஈ. சிங்கப்பூரில் முதலீட்டு ஊக்குவிப்புக் கருத்தரங்கு (செத்தம்பர் 3–4)

உ. ஐ. அ. நா. நியூயோர்க்கில் முதலீட்டு ஊக்குவிப்புக் கருத்தரங்கு அதன் பின்னர் ஐ அ. நா. வாசிங்டன் டி. சி. இல் உள்ள ப.பு. அ, வ, ப. நா,நி. ஆகியவற்றுடன் கலந்துரையாடல்கள். அத்துடன் பெல்கிறேட் யுகோலேவாக்கியாவில் ப. நா. நி. ப. பு. அ. வ, என்பவற்றின் இடைநிலக்குழு அமர்வுகளிலும் ஆண்டுக் கூட்டங்களிலும் (8 செத்தெம்பர் 6 ஒற்றோபர்)

ஊ. இந்தோனேசியா. யாகர்த்தா ஆளுநர்களின் தென்கிழக்காசியா நியூசிலாந்து அவுஸ்ரேலிய ஆளுநர்களின் 13வது கூட்டம் (26நவெம்பர்3 திசெம்பர்)

முனைவர் டபிள்யூ. எம். திலகரட்ண நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் தொடர்ந்தும் நாணயச் சபையின் அலுவலக உறுப்பினராக இருந்தார்.

திரு. சி. பி. சண்முகம் திறைசேரி துணைச் செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் முனைவர் திலகரட்ண அவர்களின் வராமைக்காலங்களில் நாணயச் சபையின் அலுவல்சார் உறுப்பினராகத் தொழில் புரிந்தார்,

முனைவர் காமனி கொறியா துணை ஆளுநர் வர்த்தக அபிவிருத்திக்கான ஐ.நா. அமைப்பின் செயலாளர் நாயகமாக தொடர்ந்தும் பணி புரிந்தார்.

திரு. ஈ. எரமுதுகொல்ல மூத்த துணை ஆளுநர் 1979 சனவரி 14 சனவரி 22 கொண்ட காலப் பகுதியில் வெளிநாட்டில் இருந்தபோது நாணய விதி அதிகார சட்டத்தின் 24 என்னும் பிரிவின் நியதிகளின்படி வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலகராகக் கடமை புரிந்ததார். அவர் 1979 மே 1 தொடக்கம் பதில் நிறைவேற்று அலுவலராக பன்னாட்டு நாணய நிதியில் கடமை ஏற்றார்.

முனைவர் எச். என். எஸ். கருணாதிலக துணைஆளுநர் 1979 மே 1 நாள் முதல் மூத்ததுணைஆளுநர்பதவியில் அமர்த்தப்பட்டார். முனைவர் கருணாதிலக அவர்கள் ஆளுநர்வெளிநாட்டில் இருந்த சில காலப் பகுதிகளில் நாணய விதிச் சட்டத்தின் 24 என்னும் பிரிவின் நியதிகளின்படி வங்கியின் முதன்மைநிறைவேற்றுனராகக் கடமை புரிந்தார்.

மூத்த உதவி ஆளுநரும் நாணயச்சபைச் செயலாளருமான திரு. க. கனக சபாபதி அவர்கள் 1979 மே 1ஆம் நாள் தொடக்கம் துணை ஆளுநராக பதவியிலமர்த்தப்பட்டார். ஆளுநரும். முனைவர் கருணாதிலக அவர்களும்வெளிநாட்டில் இருந்தபோது மூத்த துணை ஆளுநராக பதவியிலமர்த்தப்பட்டு முதன்மை நிறைவேற்று அலுவலராகக் கடமை புரிந்தார்,

திரு.ஜே, ஜி, பி, ஜயசுந்தர ஆளுநரின் உதவியாளர் 1979 யூன் 24 முதல் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

திரு. ஏ.பண்டாரநாயக்க முதன்மைக் கணக்காளர் 1979 பெப்புருவரி 10 தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

திரு.த, சச்சிதானந்தன் மதியுரையாளர் 1979 ஏப்பிரல் 22 முதல் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

முனைவர் ஏ. ஜி. ஏ. டி. பெரேரா செயலாளர் 1979 ஒகத்து 1 முதல் வங்கிப் பணியில் இருந்து ஓய்வுபெற்றார்.

திரு, ஏ;ஆர். பர்ணாந்து செலாவணிக் கட்டுப்பாட்டாளர் 1979 திசெம்பர் 3ஆம் நாள் முதல் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்,

திரு, ஆர். டி. கே. ஜே. அத்தநாயக்க முகாமைக் கணக்காய்வுப் பதில்பணிப்பாளர் 1979 பெப்புருவரி 1 முதல் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

திரு, டி, எல். கன்னங்கர, மதியுரையாளரும் தொழில் அபிவிருத்தியின் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரும்,1979மே முதல் ஆளுநரின் உதவியாளராகவும் நாணயச் சபையின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார்.

அரச இரத்தினக் கற் கூட்டுத்தாபனத்தின் தலைவராக முழு நேர விடுவிப்பிலிருந்த திரு. ரி. ஜி, புஞ்சி அப்புகாமி அவர்கள் வங்கிப்பணிக்கு மீள வருவிக்கப்பட்டு 1979 நவெம்பர் 16 முதல் மதியுரையாளராக நியமிக்கப்பட்டதுடன் அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தின் பகுதிநேர தலைவராகக் கடமையாற்ற விடுவிக்கப்பட்டார்.

திரு. ஆர். எம். தென்னக்கூன் ஆளணிப் பணிப்பாளர் 1979 ஒகத்து 1முதல் வங்கி அபிவிருத்தி பயிற்சி மதியுரையாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. எம்.ஈ. டி. ஆபுறுபேணல் பொறியியலாளர் 1979 செத்தெம்பர்1முதல் மதியுரைப் பொறியியலாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. வெ. சி. சுப்பிரமணியம் முதன்மைக் கணக்காளர் 1978 திசெம்பர் 4 முதல் அவரின் முதன்மைக் கணக்காளர் கடமைகளுடன் செலாவணிக் கட்டுப்பாட்டாளராகவும் நியமிக்கப்பட்டார்.

முனைவர் எஸ், ரி,ஜி. பர்ஞுந்து பொதுப்படுகடன் மேற்பார்வையாளர் 1979 செத்தெம்பர் 1 முதல் அபிவிருத்தி நிதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

நிதி திட்டமிடல் அமைச்சிற்கு முழுநேர விடுவிப்பிலிருந்து அபிவிருத்தி நிதி துணைக் கண்காணிப்பாளரான திரு. சி, இராசலிங்கம் அவர்கள் வங்கிப் பணிக்கு மீள வருவிக்கப்பட்டு 1979 செத்தெம்பர் 1 முதல் பொதுப்படுகடன் கண் காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். எனினும் அவர் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு பகுதி நேர விடுவிப்பிலுள்ளார்.

நிதி திட்டமிடல் அமைச்சிற்கு பகுதி நேர விடுவிப்பிலிருந்த பொருளா தார ஆராய்ச்சி துணைப் பணிப்பாளர் திரு எஸ். ஈஸ்பரதாசன் அவர்கள் 1979 செத்தெம்பர் 1 முதல் பொருளாதார ஆராய்ச்சி பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் தொடர்ந்து நிதி திட்டமிடல் அமைச் சிற்கு பகுதி நேர விடுவிப்பிலுமுள்ளார்.

திரு. யு. ஏ. டி. சில்வா பதில் மேலதிக முதன்மைக் கணக்காளர் 1979 மே முதல் வங்கி மேற்பார்வைப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட் டார்.

திரு. எம். எச். சௌஜா ஊழியர் சேமநிதியின் துணை மேற்பார்வையா ளர் 1979 ஒகத்து 1 முதல் முகாமைக் கணக்காய்வுப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. டி. கே. ஜயவர்த்தன நாணய துணை மேற்பார்வையாளர் 1979 ஒகத்து 1 முதல் பதில் ஆளணிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்,

திரு. பி. வத்தேகம துணைச் செயலாளர் 1979 ஒகத்து 1 முதல் பதில் செய லாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. எஸ். பி. விக்ரமரட்ண துணைச் செயலாளர் 1979 செத்தெம்பர் 1 முதல் பதில் இடப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. ஏ. ரி. டபிள்யூ. யொகோரெட்ணம் துணை முதன்மைக் கணக்காளர் 1979 செத்தெம்பர் 1 முதல் பதில் மேலதிக முதன்மைக் கணக்காளராக நிய மிக்கப்பட்டார்-

திரு. வி. கே. விக்கிரமசிங்க அபிவிருத்தி நிதிப் பணிப்பாளர் 1979 பெப்புரு வரி 21 முதல் இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கிக்குப் பொதுமுகாமையாள ராக முழு நேர விடுவிப்பிலிருந்தார்.

நிதி நிறுவன மேற்பார்வையாளராக நியமனம் பெற்று கம்பியா மத்திய வங்கிக்கு விடுவிப்பிலிருந்த பதில் மேலதிக முதன்மைக் கணக்காளர் திரு.எச். பிரேமரட்ண அவர்கள் 1979 செத்தெம்பர் 17 முதல் மீண்டும் வங்கிப் பணிக் குத் திரும்பினர். மீண்டும் அவர் 1979 திசெம்பர் 26 முதல் ஒரு ஆண்டு காலப் பகுதிக்கு கம்பியா மத்திய வங்கிக்கு விடுவிக்கப்பட்டார்.

முனைவர் எல். ஈ. என். பெர்ணுந்து பொருளாதார ஆராய்ச்சித் துணைப் பணிப்பாளர், தொடர்ந்து நிதி திட்டமிடல் அமைச்சிற்கு பகுதி நேர விடுவிப் பின் கீழ் உள்ளார்.

முனைவர் பி.ஏ.எஸ். தகநாயக பொருளாதார ஆராய்ச்சி துணைப் பணிப்பாளர், 1979 யூன் முதன் தேசிய விலைகள் ஆணைக்குழுவின் செயலாளர் நாயகமாக வர்த்தக,கப்பற்துறை அமைச்சிற்குப் பகுதி நேர விடுவிப்பிலிருந்தார்.

திருவாளர்கள் ஜி. எம். பி. டி. டி சில்வா, டி. ஜே. எம். மீகொட, ஏ. ஏ. ஆர். திசநாயக்க 1979 செத்தெம்பர் 1 முதல் இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கிக்கு முழுநேர விடுவிப்பிலுள்ளார்கள்

முனைவர் ஜி. டபிள்யூ. பி. விக்கிரமசிங்க அவர்கள் 1979 சனவரி 11 முதல் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக முழுநேர விடுவிப்பிலிருந்தார்.

திருவாளர்கள் கே. ஜி. தர்மசேன, சி ஈ. ஜயசூரிய ஆகியோர் 1979 சனவரி 16 முதல் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்திற்கு முழுநேர விடுவிப்பிலுள்ளார்கள்.

மீளாய்விற்குட்பட்ட ஆண்டின் பின்வரும் மத்திய வங்கி அலுவலர்கள் அரசிற்கு தொடர்ந்தும் முழுநேர விடுவிப்பிலிருந்தனர்.

1, திரு. பி. எம். அசன் உணவு கூட்டுறவு அமைச்சின் உணவு ஆணையாளராக

2. திரு ஏ. ஏ. டி. ஜஸ்ரின் கைத்தொழில் அமைச்சின் ரயர் கூட்டுத் தாபன தலைவராக

3. திரு. என். பீ. திசநாயக திறைசேரி

4. திரு, டபிள்யு. எல். டி சில்வா உணவு கூட்டுறவு அமைச்சின் :'மாக்பெட்'' பொது முகாமையாளராக

முனைவர் ரி. டபிள்யூ. வை. றணவீர ஐக்கிய நாடுகளில் தொடர்ந்தும் பதவியிலுள்ளார்.